சுதந்திரன்
SUTANTIRAN
தொலைபேசி: 23411 விலை சதம் 35
வள்ளுவர் ஆண்டு 2005, மாசி 12உ (24-2-74) ஞாயிறு ஜனவரி 24 லபர் 1 -புத்தகம் 27 இதழ்-26

# செல்லத்தம்பு தலைமையில் மன்னாரில் தீவிர பிரசாரம்!

## ஜோன் மார்க் வெற்றி உறுதி!

மன்னார் இடைத்தேர்தல் குறித்து மேற்படி இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சிப் பிரசாரத்துக்கு பொறுப்பாக இருந்து—மூலை முடுக்கெங்கும் சென்று மக்களைச் சந்தித்துள்ள வவுனியாச் சிங்கம் சே. மா. செல்லத்தம்பு சுதந்திரன் நிருபருக்களித்த விசேட செய்தி வருமாறு:—

கடந்த பொதுத் தேர்தலில் யூ. என். பி. வேட்பாளரிலும் பார்க்க திரு. அழகக்கோன் 69 வாக்குகளே மேலதிகமாக பெற்று வெற்றி பெற நேர்ந்தமைக்கு பல காரணங்களுண்டு. ஜனப்ரகம் அப்போது மன்னார் பட்டினசபையின் தலைவராக இருந்தார். அத்துடன், அது

(4-ம் பக்கம் பார்க்க)



## தமிழர் கூட்டணி வேட்பாளரைத் தெரிவுசெய்து

# 'விடுதலைப்போருக்கு வலிவு சேர்ப்பீர்!'

## மன்னார் வாக்காளர்களுக்கு செல்வாவின் வேண்டுகோள்

தமிழர் கூட்டணியின் சார்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிடும் திரு ஜோன்மார்க் அவர்களை பெருவாரியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்து—தமிழ் பேசும் மக்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டத்துக்கு வலிவு சேர்க்குமாறு மன்னார்த் தொகுதி வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோளில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

பெப்ரவரி 25ம் திகதி நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் கட்டுப்பாடாக தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கே வாக்களித்து—வெற்றி பெறச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் பேசும் மக்கள் இன்று இந்நாட்டில் அரசியல் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். புதிய அரசியல் சட்டம் தமிழ் பேசும் மக்களின் மொழி, மத, இன உரிமைகளை முற்றாக மறுக்கும் ஒரு அநியாயமான சட்டமாகும்.

(7-ம் பக்கம் பார்க்க)



## இராசதுரை பேசுகிறார்

மன்னார்தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் திரு. யோன் மார்க்கை ஆதரித்து நடைபெறும் இறுதிப் பொதுக்கூட்டம் 23-2-74ல் மன்னார் சென். செபஸ்தியன்தேவாலயத்தின் அருகே நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மட்டுநகர் முதல்வர் எழில் தமிழ் ஆளர் திரு. செ. இராசதுரையும் கலந்து கொள்கிறார். அத்துடன் ஏனைய தமிழரசுப் பா. உ.க்கள், தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இ. தி. மு. க. ஆகியவற்றின் தலைவர்களும் பேசுகின்றனர்.



# "தமிழ் அவமதிக்கப்பட்டிருக்கிறது! எனவே இது சர்வ தேசப் பிரச்சினை!"

## யாழ் சம்பவம் குறித்து தமிழக மேலவையில் ம. பொ. சி.

"யாழ்ப்பாணத்தில் உலகத்தமிழ் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டுக்கு இந்த மாநில அரசை அழைக்கவில்லை. அதற்காக முதல்வர் அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

"என்னைத் தனிப்பட்ட முறையிலே அழைத்தார்கள். 'வருகிறேன்' என்று எழுதியும் கடைசியில் என்னையும் விட்டுவிட்டார்கள்; நான் அரசியல் வாதி என்ற காரணம் போலும்!

அந்த மாநாட்டை நடத்தியவர்கள் அரசியல் வாடையே இல்லாமல் நடத்த வேண்டுமென்று இலங்கை அரசு விரும்பியது என்பதற்காகத்தான் இந்த அரசை அழைக்கவில்லை. என்னைப் போன்ற தனிப்பட்ட அரசியல் வாதிகளை முதலில் அழைத்துப் பின்னர் கைவிட்டார்கள்.

என் போன்றவர்களை ஒதுக்கி வைத்து, இலங்கை அரசைத் திருப்திப்படுத்தும் வகையில் அந்த மாநாடு ஏழு நாட்கள் நடத்தப்பட்டது. ஒரு குழப்பமும் இல்லை. மாநாட்டு நடவடிக்கைகளில் அரசியல் கலக்கவேயில்லை. அதில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் புலவர்களே. அவர்களில் எவரும் அரசியல் வாதி இல்லை!

மாநாடு முடிந்து இறுதியில் மாநாட்டுக்கு வந்தவர்களை வழியனுப்புவதற்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் இலங்கைப் பொலிசார் "ஜாலியன் வாலாபாக்" நடத்தியிருக்கின்றனர். ஏன் பஞ்சாப்பில் நடந்த ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகிறேன் என்றால், ஒரு கட்டிடத்தின் காம்பவுண்டில் திறந்த வெளியில் — கூட்டம் நடந்திருக்கிறது அதிலே முன்னறிவிப்பு கொடுக்காமல் பொலிசார் புகுந்து அடித்திருக்கிறார்கள். காம்பவுண்டின் முன்வேலியில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கிறது.

"யாழ்ப்பாண நிகழ்ச்சி இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்திருந்தால், இங்கு அதை எடுத்திருக்க மாட்டேன்; எனக்கு சர்வதேச நியதிக்கு கட்டுப்படும் பண்பு உண்டு.

ஆனால் யாழ்ப்பாண நிகழ்ச்சி, சர்வதேசப் பிரச்சினையாக இருக்கிறது. மத்திய அரசு அது பற்றி விசாரித்துத் தகவல் தரவேண்டுமென்றும் நம

(7-ம் பக்கம் பார்க்க)

# இலண்டனில் நடைபெற்ற அனுதாபக் கூட்டம், ஊர்வலம்

## ஈழத் தமிழர் விடுதலை இயக்கம் நடத்தியது!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலை எதிர்த்து இலண்டன் மாநகரில் இரு கண்டனக்கூட்டங்களும், ஊர்வலமும் நடைபெற்றுள்ளன. இந்தக் கண்டனக்கூட்டங்களையும் ஊர்வலத்தையும் லண்டனிலுள்ள ஈழத் தமிழர் விடுதலை இயக்கத்தினர் நடத்தியுள்ளனர்.

சனவரி 27ம் திகதி நடைபெற்ற கண்டனக் கூட்டம் பற்றி பின்வரும் அறிக்கையை மேற்படி இயக்கம் வினியோகித்திருந்தது.

"ஈழத்து தமிழ் மாநாட்டில் அரசு அடக்குமுறைக்கு தமிழுயிர்கள் பலி! நடந்து முடிந்த நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று எண்ணற்ற தமிழ் மக்களின் குருதி சிந்தப்பட்டதும் எட்டு உயிர்கள் பலியெடுக்கப்பட்டதும் நீங்கள் அறிந்ததே.

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# வீட்டுக்குப் போடுகின்ற வோட்டு ஆட்சிக்கு வைக்கின்ற வேட்டு!!

மன்னார் மண்ணில் வாழுகின்ற என் தன்மானச் சிங்கங்களே!

இந்நாட்டுத் தமிழினத்தின் இணைபிரியாச் செல்வங்களே!

தமிழ் மானம் காத்துவரும் தமிழ்த்தாயின் பிள்ளைகளே!

இன்று உலகமெலாம் உங்களையே வைத்த கண் மூடாது பார்த்தபடி இருக்கிறது!

பெப்ரவரி இருபத்தைந்தாம் நாள் நீங்கள் அளிக்கப் போகின்ற தீர்ப்பைக்காண ஆவலோடு நாட்களை எண்ணியபடி உலகம் எதிர்பார்த்துக்கிடக்கிறது!

விடுதலைவிரும்பிகள் நீங்கள் தரவிருக்கின்ற தீர்ப்பைக் கேட்டிடத் துடிதுடித்து நிற்கிறார்கள்!

ஈழத் தமிழ் பேசும் சமுதாயத்தின் தேசிய வாழ்வின் எடுத்துக்காட்டு உங்கள் மண்!

தமிழ்பேசும் மக்களின் இணைபிரியாத் தோழமைக்கு ஈடிணையற்ற எடுத்துக்காட்டு உங்கள் தொகுதி!

இந்துக்களும், இஸ்லாமியர்களும், கத்தோலிக்கர்களும் இன்பத் தமிழால் ஒன்றுபட்டு இணைபிரியா சோதரராய் வாழுகின்ற தொகுதி உங்கள் தொகுதி!

தேவாரப்பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தையும்—மடுமாத ஆலயத்தையும்—பழம்பெரும் இஸ்லாமியப் பள்ளிகளையும் கொண்ட புனித மிக்க மண் உங்கள் மண்!

தமிழினம் தனக்கென ஓர் ஆட்சியின் கீழ் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்ந்த நாட்களில்—

உங்கள் மாதோட்ட நன்னகர் செல்வச் செழிப்புடன் திகழ்ந்ததுண்டு!

கத்துகின்ற மன்னார்க் கடலில் கிடைக்கின்ற முத்துக்களை வாங்குவதற்காக பொன்னையும் பொருளையும் வைத்துக்கொண்டு வெளிநாட்டு வணிகர்கள் உங்கள் காலடியிலே காத்துக்கிடந்ததுண்டு!

இதற்காக சீனர்களும், யவனர்களும் மற்றும் வெளிநாட்டாரும் உங்கள் மன்னாரின் வீதிகளில் நடமாடியதுண்டு!

தமிழ் ஈழத்தின் விளைபொருட்களை வாங்கிச்செல்வதற்காக வெளிநாட்டிலிருந்து வந்திருந்த கப்பல்கள் உங்கள் மன்னார்த் துறைமுகத்தில் காத்துக்கிடந்ததுண்டு!

மன்னார்க்கடலில்கிடைத்த முத்துக்களை எகிப்திய அழகி கிளியோபாத்ரா சாராயத்தில் போட்டுக்குடித்ததாகவும் கதையுண்டு!

அத்தகைய செல்வச் செழிப்புள்ள திருநாடாக மன்னார் திகழ்ந்ததுண்டு — தமிழ் சமுதாயம் சுதந்திரமாக வாழ்ந்த நாட்களில்!

அப்படிப்பட்ட தமிழ் பேசும் சமுதாயத்தின் இன்றைய நிலை யென்ன?

அடிமைகளாய் — குடிமைகளாய் — அடிபட்டு உதைபட்டு—உரிமைகளை இழந்து — சிங்கள ஆட்சியினரால் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு- மிதிக்கப்பட்டு—இன்றைக்கு தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்!

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய அரசியல் சட்டம் — தமிழ் சமுதாயத்தை புதைகுழிக்கு அனுப்ப திட்டப்பட்ட மரணவோலையாகும்!

அந்த அநியாயச் சட்டத்தை எதிர்க்கிறார்கள் தமிழ் பேசும் மக்கள் என்பதை எடுத்துக் காட்டிட தம்முடைய காங்கேசன்துறை பா. உ. பதவியை உதறியெறிந்து ஆட்சியாளருக்கு சவால் விடுத்தார் பெரியவர் தந்தைசெல்வா!

தந்தை செல்வாவின் சவாலை ஏற்றிட அஞ்சிய சிங்கள ஆட்சி — காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தி செல்வாவுடன் போட்டியிடுவதற்கு பயந்து—தேர்தலையே நடத்தாது பின்போட்டு, ஜனநாயகத்துக்கு குழிதோண்டி வருகிறது!

ஆனால், சிங்கள ஆட்சியாளரின் எண்ணத்தில மண்ணைப் போட்டு, புதிய அரசியல் சட்டத்தை தமிழ் சமுதாயம் எதிர்க்கின்றதென்பதை நிலை நாட்டும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவதற்கு — முதியவர் — மன்னாரின் முத்து — அமரர் அழகக்கோன் தன் உயிரையே தந்தார்!

அதன் காரணமாக—புதிய அரசியல் சட்டம் குறித்து மன்னாரில் தமிழ் பேசும் மக்கள் தீர்ப்பை வெளிப்படுத்திட சந்தர்ப்பம் ஏற்படுத்தி வைத்திருக்கிறார் அமரர் அழகக்கோன்!

ஆம்—தம்முடைய சாவிலும், தமிழ் சமுதாயத்தின் உரிமையுணர்வைப் பிரதிபலிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி வைத்த உத்தமர் அவர்!

அத்தகைய தானைத் தலைவர் அழகக்கோன் காட்டிய வழியில் — செல்வாவின் சீரிய தலைமையில் — 1956ம் ஆண்டிலிருந்து — கடந்த 18 ஆண்டுகளாக—விடுதலைப் பாதையில் வந்துகொண்டிருப்பவர்கள் நீங்கள்!

உங்கள், தமிழுணர்வும், தன்மான வீரமும், சுதந்திர வீறும் சிங்கள ஆட்சிக்கு நன்கு தெரியும்!

அதனால் இடைத்தேர்தலில், தமிழர் கூட்டணியுடன் — தமிழரசுக் கட்சியுடன்—நேரடியாக போட்டியிட முன்வராது வெற்றிகரமாகப் பின் வாங்கி விட்டது ஆளும் சிங்களக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி!

சென்றபொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது ஆளுங்கட்சியின் வேட்பாளருக்கு கட்டுப் பணமும் இல்லாமற் செய்து— அவர்களது முகத்தில் நீங்கள் கரி பூசியதை இன்னும் அவர்களும் மறக்கவில்லை — தமிழ் சமுதாயமும் மறக்கவில்லை.

அதனால் அவர்கள் ஒடி ஒளிந்துவிட்டார்கள்!

போட்டியிடுகிறது மற்றோர் சிங்களக் கட்சி! ஐக்கிய தேசியக்கட்சி!

அந்தக் கட்சிதான் இந்நாட்டில் தமிழ் சமுதாயத்துக்கு எதிராக துவேஷத்தை தூண்டி வளர்த்த கட்சி! 15 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்த கட்சி! தமிழ் நிலங்களில் சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றி அவற்றை அபகரித்த கட்சி!

1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது தமிழனை வெட்டுங்கள் கொல்லுங்கள் என்று தனது பத்திரிகையான 'சியரட்ட'வில் பாடல் எழுதிய கட்சி!

பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட மூலகாரணமாக இருந்த படுபாதகக் கட்சி!

'சிங்களம் மட்டும்' பௌத்தத்துக்கு தனியிடம்—எனும் தமிழ் பேசும் மக்களை குழிதோண்டிப் புதைக்கும் கொள்கைகளையே இன்னமும் கொண்டுள்ள இனவெறிக்கட்சி!

புதிய அரசியல் சட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று ஒரு போதும் ஒப்புக்காகவேனும் கருதா—கட்சி!

அப்படிப்பட்ட யானைக் கட்சி தமிழ்ப் பயிரை—சுதந்திரப் பயிரை—அழித்துவிட மதம்பிடித்து வந்து நிற்கிறது மன்னாரில்!

எனவே என்னருமை மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்களே!

பெப்ரவரி 25ல் நீங்கள் என்ன தீர்ப்பு அளிக்கப் போகிறீர்கள்?

நீங்கள் அளிக்கப்போகும் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்பது எனக்கு தெரிந்தாலும், அதை கொஞ்சம் உறைப்பாக அளியுங்கள் என்றே உங்களைக் கேட்கிறேன்.

'பெப்ரவரி 25ந் திகதி காலையில் எழுங்கள்! உங்கள் புனிதமான கடமையை எண்ணிப்பாருங்கள்!

அன்று ஒலிக்கின்ற கோவில் மணியோசை அனைத்தும் உங்கள் காதுகளில் விடுதலை, விடுதலையென்றே ஒலிக்கட்டும்!

பாடுகின்ற பறவைகளின் கீதங்கள் எல்லாம் — பைந்தமிழன்னை அடிமைக் குழியில் வீழ்ந்து—எழுப்புகின்ற அழுகுரலோசையாகவே கேட்கட்டும்!

வீசுகின்ற காற்று விடுதலை சிந்தனைகளையே தரட்டும்!

உதிக்கின்ற உதயசூரியன் கொதிக்கின்ற தமிழுளங்களை உங்கள் சிந்தனைக்கு கொண்டுவரட்டும்!

உங்கள் மத்தியிலே—மன்னார் முற்றவெளிக் கூட்டத்திலே—1972 ஜூன் திங்கள் 10ம் நாள் பேச வந்திருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் — பேச முன்பே கைது செய்யப்பட்ட அக்கிரமக் காட்சி உங்கள் நினைவுக்கு வரட்டும்!

அன்று கைது செய்யப்பட்டு விசாரணை ஏதுமின்றி சிறைக்குள் தள்ளப்பட்ட அந்தக் கவிஞன்—இதுவரை ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகியும் — இன்னும் சிறைக்குள் வாடிக் கிடக்கின்ற பரிதாபக் காட்சியை நினைவுக்குக்கொண்டு வாருங்கள்!

அந்தக் கவிஞன் உங்களை பார்த்துக்கொண்டு — அநீதி புரியும் இந்த அக்கிரம ஆட்சிக்கு சவுக்கடி கொடுப்பது போல—தமிழர்கூட்டணிக்கு வெற்றி தேடிக் கொடுங்கள் என்று உங்களிடம் கூறுவதை உங்கள் மனக்கண் முன்னால் கொண்டு வாருங்கள்!

காசியைப் போலவே, சேனாதிராஜா, முத்துக்குமார், போன்ற ஏராளமான தமிழ் இளைஞர்கள் சிறைக்குள் விசாரணை ஏதுமின்றி—காரணம் ஏதுமின்றி பூட்டப்பட்டுகிடப்பதையும் சித்திரவதைப்படுத்தப்படுவதையும் ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்!

இந்த தமிழ் இளைஞர்கள் பற்றி— அவர்களுக்கெதிராக நடக்கின்ற அநீதிகள் பற்றி யானைக் கட்சியினர் எப்போதாவது குரல் கொடுத்திருக்கிறார்களா என்பதையும் எண்ணிப்பாருங்கள்!

ஆயுதமெடுத்துப் போர் புரிந்து ஆட்சியைக் கவிழ்த்திட முனைந்த சிங்கள இளைஞர்கள் மீது இரக்கம் காட்டி அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகொடுத்து விடுதலை செய்யும் அரசாங்கம் தமிழ் இளைஞர்களை மட்டும் காரணமின்றியும் விசாரணையின்றியும் சிறையில் அடைத்துக் கொடுமைப் படுத்தும் இன்றைய ஆட்சியாளரின் மிருகத்தனத்தை எண்ணிப் பாருங்கள்!

தமிழ் சமுதாயத்தின் மீட்சிக்காக அந்தத் தமிழ் இளைஞர் சிறையில் வாடுவதை ஒரு முறை சிந்தியுங்கள்!

அண்மையில் சனவரி 10ம் நாள் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு கூட்டத்தில், இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் மீது பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலையும்—

அதன் பயனாக அவலப்பட்டு அடி உதைபட்ட— மண்டை பிளந்த — தமிழ் பேசும் மக்களை நினைத்துப் பாருங்கள்! சேலை இழந்து மானமிழந்த தமிழ்த் தாய்மாரை எண்ணிப் பாருங்கள்! இழந்த தமிழ் உயிர்களை நினைவில் வையுங்கள்!

இதற்கெல்லாம் ஜனநாயக ரீதியில சிங்கள அரசுக்கு பாடம் புகட்டிட—பழிவாங்கிட—அருமையான சந்தர்ப்பம் உங்களுக்கு கிட்டியிருக்கிறது.

இடைத்தேர்தலில் நீங்கள் தமிழர் கூட்டணிக்கு தமிழரசுக் கட்சிக்கு—போடுகின்ற ஒவ்வொரு வாக்கும் சிங்கள ஆட்சியின் திமிர்பிடித்த சர்வாதிகாரப்போக்குக்குவைக்கின்ற வேட்டாக அமையும்!

வீட்டுக்கு போடுகின்ற ஒவ்வொரு சீட்டும்—தமிழர் நாட்டின் விடுதலைக்கு போடுகின்ற அத்திவாரம்! சிங்கள ஆட்சி தமிழ் பேசும் மக்கள் மீது நடத்துகின்ற ஆதிக்கத்துக்கு எதிராக வைக்கப்படுகின்ற வேட்டு!

இதை உணர்ந்து உம் கடமையைச் செய்வீர்! தமிழ் சமுதாயத்தின் பெருமையைக் காப்பீர்!!

—உம் அன்புத் தோழன்,

**கோவை - மகேசன்.**

# இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையல்ல! அது ஓர் உலகப் பிரச்சினை!

## அ தி மு.க. ஏட்டின் ஆசிரியத் தலையங்கம்!

அ. தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் தென்னகம நாளேடு அதன் 22. 1. 74 இதழில் "திருமதி பண்டா பாடம் பெறட்டும், எனும் தலைப்பில் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் வருமாறு:—

"அந்நிய ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுதலை அடைந்தபின் இலங்கைத் தீவின் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் இயல்பாக ஆட்சியைப்பிடித்தார்கள். அந் நாட்டில் சிங்கள மக்களைப்போலவே சகல அடிப்படை உரிமைகளும் கொண்ட முப்பது லட்சம் தமிழ் மக்களும் மொழியால் சிங்களவரிடமிருந்து வேறுபட்டிருந்தாலும சிங்கள மக்களைப்போலவே இலங்கைத் தீவுக்கு சொந்தக்காரர்கள்.

இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ அமைப்பாக தமிழரசுக்கட்சி விளங்குகிறது. இக்கட்சி காந்தியடிகளின் அறப்போர் முறையை தனது வழியாக ஏற்றுக்கொண்டது. அமரர் வன்னியசிங்கம் ஈழத்துக் காந்தி என்று அழைக்கப்படும் செல்வநாயகம் ஆகியோரால் தமிழரசுக்கட்சி வழிநடத்தப்பட்டுவருகிறது.

இலங்கைத்தீவினை ஒரு சமஷ்டிக் குடியரசாகமாற்றி தமிழ் பகுதிகளுக்கு சுயாட்சி தந்து—தமிழர்களின் உரிமைகளுக்கு பங்கமில்லாமல் அதே நேரத்தில் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு கேடுநேராமலும் இருக்க தக்கவகையில் இலங்கைக்கு ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க தமிழரசுக்கட்சி அரும்பாடுபட்டு வந்தது.

இந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை; இலங்கையில புதிய அரசியல் சட்டம் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பாழ்படுத்தும் வகையில் அமைந்துவிட்டது இனி திருத்தவே முடியாத அளவு சிங்கள பெரும்பான்மையினர் ஒரு கடுமையான நிலையை உறுதி செய்து விட்டார்கள்.

சமஷ்டி அமைப்புக்கான கதவுகள் அடைக்கப்பட்ட நிலையில், இலங்கையின்புதிய அரசியல் சட்டத்தை ஏற்று அடிமைகள் போன்று இரண்டாந்தரக்குடி மக்களாக வாழ்வதா அல்லது உரிமைகளைக் காத்துக் கொள்ள வேறு வழிகளை நாடுவதா என்று கேள்வி தமிழ் மக்கள் முன்னால் எழுந்தது.

தங்களுக்குச்சொந்தமான ஒரு நாட்டில் இரண்டாந்தரக்குடிமக்களாக வாழ்வதைவிட உரிமைகளைக் காத்துக்கொள்ளும் முயற்சி

(9-ம் பக்கம் பார்க்க)

# பாரில் எழுந்த தமிழோசை

கோவை-மகேசன்

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ் நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் ஒருநாள் தேவலோகத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றைக் காண என்னுடன் வரும்படி என் அருமை வாசகர்களைச் சற்று அழைக்கிறேன்.

அலங்கார ஊர்தி பவனியின் அழகு பற்றிச் சொல்வதாக கூறிவிட்டு எங்கோ எல்லாம் எம்மைக் கூட்டிச் செல்கிறாயே என்றுதானே முணு முணுக்கிறீர்கள்! முணுமுணுப்பை நிறுத்திவிட்டு என்னுடன் வாருங்கள்!

தேவேந்திரன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண்டிருந்தது! இந்திராணியோ இடி விழுந்தவள்போல அருகே இருந்தாள்.

படைப்புத்தேவன் நான்முகன், காத்தற்றேவன் திருமால், காதல்தேவன் மன்மதன், நாரதர் இப்படி அனைவருமே தேவசபையில் வாட்டத்துடன் உட்கார்ந்திருந்தனர்.

அவர்களது முகங்களில் இந்த வாட்டம் ஏற்படக் காரணம்தான் என்ன?

நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதானா? நாம் தோற்று விட்டோம் - ஈழத் தமிழர்கள் வென்றுவிட்டார்கள் என்பது உண்மைதானா?'' — தேவேந்திரன் இவ்வாறு கேட்டான் கரகரக்கும் குரலில்!

''ஆம் தேவேந்திரா, ஆம் நாம் தோற்றுத் தான் விட்டோம்! எழில் நகரங்களை உடனுக்குடன் உண்டாக்குவதில் நம்முடைய தேவதச்சனை மயன் யாழ்ப்பாண தமிழ் மக்களுடன் போட்டியிடவே முடியாது! என்றான் நான்முகன்.

''மன்னா - நாங்கள் அமிர்தம்பெறவேண்டி, வியர்க்க விறுவிறுக்க கடலைக்கடைந்து அதன் பின்னர் அசுரர்களுடன் சண்டை வேறு போட வேண்டியேற்பட்டது. ஆனால் தமிழர்கள் பேசுகிறார்களே, அந்த மொழிக்கு பெயரே அமிழ்தம். அதனால்தான் தமிழ் படித்தோர் சாவதில்லை'யென்று தென்னாடுடைய சிவனைப் போற்றிய மாணிக்கவாசகர் கூறியுள்ளார். ''தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை — தமிழ்க்கவிஞன் பாரதிதான செத்ததுண்டோ?'' — என்று அதனால்தான் பாரதிதாசன் எனும் கவிஞன் இறுமாப்புடன் கேட்டிருக்கிறான். இப்போதோ யாழ்ப்பாணத்தில் தமிழ் எனும் அமிழ்தையே கடைந்து. அதிலிருந்து திரட்டிப்பெறுகின்ற இன்சுவையை மாந்திப்பருகி களிப்படைந்துகொண்டிருக்கிறார்கள் ஈழத்தமிழர்கள்!''

—இவ்வாறு நாரதன் கூறிக்கொண்டிருக்கவே, காலதேவன் குறுக்கிட்டான்!

''நிறுத்தும் நாரதரே! அவர்கள் மாநாடு நடத்தட்டும்! மாநாட்டின் இறுதி நாளில் என் கைவண்ணத்தைக் காட்டுகிறேன்''— இருந்துபாரும்'' — என்றான் காலதேவன்!

''காலதேவா! தமிழர்களிடம் உமது பாச்சா ஒருபோதும் பலிக்காது! தமிழர்களின் உயிரே தமிழ். அத்தமிழே அமிழ்தம். அந்த அமிழ்தத்தை சிந்தைநிறைய பருகிக்கொண்டிருப்பவர்கள் சிலரது உயிரை பறித்துவிட நீர் திட்டம் திட்டலாம். அதனால் உம்மை நீரே ஏமாற்றிக் கொள்ளலாமே தவிர-தமிழ் எனும் அமிழ்தைப் பருகியவர்கள் சாகா வரம்பெற்று அங்கேயே என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்'' என்றான் நாரதன்?

''போதும் நிறுத்துங்கள்— தமிழ் அமிழ்து என்பது எப்போதோ முடிவான விஷயம். அதுபற்றி ஆராய்ச்சி நடத்த இச்சபையை நான் கூட்டவில்லை! நினைத்தவுடன் கண்ணிமைப்பதிக்கும் கணயம் சம் நிறைந்த எழில் நகரங்களை நிர்மாணிக்கும் ஆற்றல் நம்முடைய தேவதச்சன் மயனுக்கு மட்டுமே உண்டு என்று இறுமாந்திருந்தோம்; இப்போது அந்த இறுமாப்பையும் தூள் தூளாக்கி விட்டார்களாம் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் அது உண்மைதானா?

''உண்மைதான் மன்னவா நான் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் சுற்றினேன். மாநாடு நடைபெறும் யாழ்ப்பாண மாநகர் மட்டுமல்ல-குடாநாடு முழுவதுமே எழிற்கோலம் பூண்டிருக்கிறது. வீதி யெலாம் மகரதோரணங்கள், முத்துச்சிகரங்கள், வண்ணவிளக்குகள் — வரவேற்பு வளைவுகள்! தமிழ் வாழ்க, தமிழ் வெல்க என்று எழுதப்பட்ட பதாகைகள்! வீட்டுக்கு வீடு வாசல் தோறும் நிறை குடங்கள் — அவற்றின் முன்னால் தமிழ்ப் புலவர்களின் எழிலோவியங்கள்! யாழ்ப்பாணத் திருநகர் பற்றியென்ன சொல்வேன்! திடீரென அது ஓர் பூம்பொழில் ஆக மாறிய அதிசயத்தை என் சொல்வேன்! முழுப்பனைமரங்கள் தென்னைமரங்கள், வாழைகள், மூங்கில்கள், கமுகுகள், மாமரங்கள் திடீதிடீரென்று வீதிகளிலும், சந்திகளிலும், முளைத்தெழுந்த அதிசயத்தைக் கண்டேன்! அதுவும் இயற்கை யழகு கிஞ்சிற்றும் கெடாமல் அவை அங்கு தோன்றியிருந்தன. பனைமரங்களில் 'சோமபானம்' சேகரிப்பதற்காக முட்டிகளுமன்றோ தென்பட்டன! இரவிலே யாழ்நகரம் அழகுபுரியாக—ஒளி நகராக—காட்சியளிக்கிறது வீதிக்கு வீதி இசையரங்குகள்! நாதஸ்வர இசை ஒருபால்! வில்லிசை ஒருபால்! அறிஞர் தருகின்ற சொல்லிசை ஒருபால்! மெல்லிசை ஒருபால்! மெல்லியலார் பாடிடும் பண்ணிசை ஒருபால்! பரத நாட்டியமாடிடுவோர் எழுப்பிடும் சதங்கையின் கிண்கிணி ஓசை ஒருபால்! விழாக்காண நாள்தோறும் ஆயிரக்கணக்காக திரண்டு வந்து யாழ்நகரின் வீதிகளெங்கும் நடமாடித் திரியும் அழகு மயில் பாவையர் எழுப்பிடும் குயில் மொழி ஒருபால்! அன்னார் கலகலவென சிரித்திடும் போது எழுந்திடும் நகையொலி ஒருபால்! அதுபோது எழுந்திடு வளையொலி ஒருபால்! குழவிகள் சிந்திடும் மழலைகள் ஒருபால்!

ஆகா, ஆகா அந்த அற்புதக் கோலத்தை எப்படி வர்ணிப்பேன்! இதற்கு முன்னர், எதற்கெடுத்தாலும், எழிற்கோலத்தை வர்ணிக்க 'இந்திரலோகம்' போல் இருந்தது என்று உதாரணம் கூறுவார்கள், இப்போது இந்திரலோகத்தையும் எழிலில் வென்றுவிட்டது 'தமிழ் விழாக்காணும் யாழ்நகர்'! தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்ட ஈழத்தமிழர்கள், அமரர்களாகிய நம்மையும் வென்றுவிட்டார்கள்!''

இவ்வாறு நாரதர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட தேவர் தலைவன் நாணித் தலைகுனிந்தான்.

''அப்படியா? நிலைமை அவ்வாறானால், நம்முடைய கட்டிடக் கலைஞன் மயன் எங்கே? அவனை நான் உடனடியாகப் பார்க்கவேண்டும்'' என்றான் இந்திரன்.

''விழாக்கோலம் பூண்டிருந்த யாழ் நகரில் எங்கோ ஓர் மூலையில் மயக்கம் போட்டு விழுந்துகிடந்தான் —இதோ தூக்கிக்கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். அவனை'' —என்று கூறி தேவதூதர்கள் இருவர் மயனை அங்கு கொண்டு வந்து அப்போது தான் சேர்த்தார்கள்—

இந்திரன் ஏதோ சொல்ல வாயெடுக்கு முன்னர்,— ''மன்னவா, நான் தோற்றுவிட்டேன். ஈழத்தமிழர்களிடம் நான் படுதோல்வியடைந்துவிட்டேன். திடீர் திடீரென்று எழில் நகரங்களை உருவாக்குவதில் அவர்கள் என்னைவிடக் கெட்டிக்காரர்கள் — கலை நுட்பம் தெரிந்தவர்கள். இதோ என்னுடைய ராஜினாமா கடிதம்—வேண்டாமெனக்கு தேவதச்சன் பதவி''—நான் மீண்டும் விழாக்கோலம் காண யாழ்நகர் செல்கிறேன். என்று கூறிவிட்டு— அங்கிருந்து நடையை கட்டினான் மயன்;

நாமும் தேவலோகத்தை இனி மறந்துவிட்டு, மயனுடன் எழில்நகராக காட்சியளித்த யாழ்நகருக்கு திரும்புவோம்.

ஃ ஃ

ஆம், 1974ம் ஆண்டு சனவரித் திங்கள் 3ம் நாள் காலை, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு காண்பதற்காக, கொழும்பிலிருந்து இரவு ரயில் மூலம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நானும் என் துணைவியாரும் சென்று இறங்கியபோது— உண்மையிலேயே எனக்கு காத்திருந்தது என்னவோ ஏமாற்றம் தான்! நாம் சென்ற அதே ''கம்பார்ட்மெண்டி''லேயே ஹங்கேரி நாட்டிலிருந்து வந்திருந்த திராவிடவியல் அறிஞர் இஸ்ட்வனும், கனடா நாட்டிலிருந்து வந்திருந்த சேலை கட்டிய பேராசிரியை செல்வி பெரண்டா பெக், பி. டி. ஐ நிருபர் திரு. சாரி, ஈழத்து முஸ்லிம் அறிஞர் ஜனாப் உவைஸ் ஆகியோரும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ்நகர் முழுவதும் மாநாட்டையொட்டி அழகுத்திருநகராக காட்சியளித்திடும் என்று மெத்த ஆர்வத்துடன் எதிர்பார்த்து வந்திருந்த எனக்கு மாநாட்டின் முதல் நாளன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டொரு சிகரங்கள் மட்டுமே காட்சியளித்தது பெருத்த ஏமாற்றத்தையே யளித்தது.

''உலகத் தமிழாய்வு மாநாடே! வருக வருக!

உன் எழில் காண, உன் ஏற்றம்பாட, பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னேற்றம் பாட உலகத் தமிழறிஞர் ஒன்றுகூடிவிட்டனர்!

உலகின் முதன் மொழியாய் குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழே தமிழே! எங்கள் அமிழ்தே அமிழ்தே!

முப்பதினாயிரம் ஆண்டுகளின் முன் நீ தோன்றி வளர்ந்த அதே மண்ணில், உன் திருநாளைக்காண, அப்பெருநாளைப் பேண அத்தனை மக்களும் அவலோடு கூடி நின்று உளம் உரை, உடல் அனைத்தாலும், வருக; வருக; எங்கள் மத்தியில் பெருக பெருக; உன் எழிலை எல்லாம் எங்களுக்குத் தருக தருக; என வரவேற்கிறோம்!

தமிழாய்வு மேற்கொண்ட தலைசாலும் சான்றோரே வருக வருக!

அகழாய்வு மேற்கொண்ட ஆன்றகலும் சான்றோரே வருக வருக;

உயிராய்வு மேற்கொண்ட உயிரியலின் சான்றோரே வருக வருக;

ஈழத்திருநாட்டின் இனிய தமிழ் மக்கள் தமிழாய்வு மாநாட்டைத் தழுவிபதன் விளைவாக தமிழர் வாழ்வு தலையெடுத்தோங்கட்டும்!

மக்கள் தொடக்கம், மன்றங்கள் ஈறாக— மாடங்கள் தொடக்கம் கூடங்கள் ஈறாக— ஆடைகள் தொடக்கம் கூடைகள் ஈறாக- ஆடல்கள் தொடக்கம் பாடல்கள் ஈறாக— அத்தனைக்கும் தூய தமிழ்ப் பெயர்களையே பயன்படுத்துவோம்!

தமிழறிஞர்களைத் தக்கவாறேப் புகற்குத் தாழாத ஒத்துழைப்பை கேளாதளித்திடுவீர்.''

—இவ்வாறு கூறும் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தினரால் வெளியிடப்பட்ட சுவரொட்டிகள் மாநகர வீதிகளில் ஆங்காங்கே காணப்பட்டன.

தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி, தமிழ் மக்கள் யாழ்நகரை விழா நகராக மாற்றுவதில் ஆரம்பத்தில் கவனம் செலுத்தாததற்கு காரணம் — மாநாட்டுக்கு எதிராக அரசாங்கம் போட்டுவந்த முட்டுக்கட்டைகள்தாம்; வெளிநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் மாநாட்டுக்கு வருவதற்கு அரசு அனுமதிக்குமா இல்லையா என்பது மாநாடு தொடங்குவதற்கு இரு நாட்கள் முன்னர்வரை கேள்விக்குறியாகவே இருந்து வந்தது; கேள்விக்குறி என்பதைவிட அரசு அனுமதி கொடுக்காது என்பதே அப்போதுள்ள நிலையாக இருந்துவந்தது. இந்தக் குழப்ப நிலைமை மட்டும் இருந்திராவிடின் மாநாடு தொடங்கப்பட்ட நாளன்றே, யாழ்நகரையும் விழாநகராக நிச்சயம் மாற்றியமைத்திருந்திருப்பார்கள் என் ஈழத்தமிழ் மக்கள்!

ஆனால்—மாநாடு தொடங்கி ஒவ்வொரு நாளும் செல்லச்செல்ல - ஒவ்வொரு மணித்தியாலமும் செல்லச் செல்ல — ஒவ்வொரு மணித் துளியும் செல்லச்செல்ல— யாழ்ப்பாணத் திருநகரம் போட்டிபோட்டுக் கொண்டு அழகு நகராக மாறிய அதிசயத்தை பின்னர் கண்டு என் தமிழ் மக்களின் ஆற்றலையும், கலைத்திறனையும், ஆர்வத்தையும் மனமாரப் பாராட்டிக் கொண்டேன்.

நான் மட்டுமென்ன—தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளில், யாழ்நகரின் தமிழ் பண்பாட்டுத் திருக்கோலம் கண்டு, அதில் மயங்காதவர்கள் எவருமே இல்லையென்று நிச்சயமாகக் கூறுவேன்!

வாடகைக்கார்கள், தனிப்பட்டவர்களின் கார்கள், கடைகள், வர்த்தக நிலையங்கள், வீதிகள் அனைத்திலும்— திருக்குறளும் அதன்மேல் உலக வரை படமும், அதன் பின்னணியில் பழந்தமிழகத்தை நினைவுபடுத்தும் ராஜகோபுரமும், இவற்றைச் சுற்றி வட்டமாக ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று எழுதப்பட்டதுமான மஞ்சள் வண்ண மாநாட்டுக் கொடி, பார்த்த இடமெல்லாம் நீக்கமற நிறைந்து காற்றில் அசைந்தாடியபடியே அனைவரையும் வருக வருக என்று வரவேற்றபடி, தமிழ் பண்பாட்டின் விளக்கமாக பறந்துகொண்டிருந்த காட்சி பார்ப்போரைப் பர

(9-ம் பக்கம் பார்க்க)

## (3) விழாக்கோலம் பூண்டது யாழ் நகர்!

## தமிழாய்ந்த யாழ் நகரம்!

— உடுவை குகதாசன் —

ஆறுபெருக் கெடுத்து அழகு பெற யாழ் நகரில்
வீறு பயின்றதுவோ? விழாக்கோலம் கொண்டதுவோ?
மாறாத் தமிழுணர்வு மரத்துவிட்ட காரணமோ?
ஊறித் தமிழ் மொழியில் ஒன்றிவிட்ட காரணமோ?
தென்னை பனையென்ன தெருவெங்கும் முளைத்ததுவோ?
அன்னை தமிழுக்கு அப்படியும் ஓர் விழவோ?
என்று பறை சாற்றும் எழிற்கோலத் தோடிணைந்து
பென்னம் பெரும் புகழைப் பெற்று விட்டாள் யாழ்
நகரம்!

முன்னே பெருமன்னர், முடிசூடி ஆள்கையிலே!
அன்னை தமிழாளை, அரியணையில் வைத்து உயர்,..
கண்போல் வளர்த்தனராம், களிப்புற வாழ்ந்தனராம்.
பொன்னால் மணிமகுடம் சூட்டி அரசாண்டனராம்,
அன்னாளில் இப்படியாய், அரசாண்ட வரலாற்றை
இன்னாளில் காண எமதிழ யாழ்நகரம்.
ஒன்றாய் இணைந்திங்கு ஓங்கி எழும்போதினிலே;
அன்னை தமிழ் மீண்டும் அரியணையில் ஏறுளோ?!

அதிரத் தமிழ் முழக்கம் ஆற்றுதற்கு, வெளிநாட்டு
முதிய தமிழறிஞர் முன்நிற்க, எம் நாட்டோர்,
சதியை நிலைநாட்டச் சந்தர்ப்பம் காத்திருந்து
விதியை நொந்திங்கு விழுந்தனரே மூலையிலே!
பதியாம் மதுரையிலே! படைகொண்ட பாண்டியனின்,
புதிய வழிதோன்றல் புறப்பட்டு, யாழ் நகரில்
கதியாகப் பாய்ந்து, நல்வழியைத் தேடி எழ.
புதிய வழிகாட்டும், பொழில் விழவும் வாழியவே!

# எண்ணம்

## மன்னார் மக்கள் தரவிருக்கும் தீர்ப்பு

மன்னார் தொகுதி வாழ் தமிழ் பேசும் மக்கள் நாளைய தினம் (25—2—74) புனிதமானதோர் சனநாயகக் கடமையை செய்யவிருக்கிறார்கள்.

சாதி, மத, பிரதேச வேறுபாடுகளனைத்தையும் களைந்தெறிந்து—தமிழ் தேசிய இனத்தின் ஓர் அங்கமாகி, ஈழத் தமிழ் சமுதாயத்தின் ஈடிணையற்ற பெருந்தலைவர் தந்தை செல்வாவின் தலைமையிலான விடுதலைப் படையாம் தமிழரசுக் கட்சியின் சீரிய தலைமையின் கீழ் 1956ம் ஆண்டிலிருந்து—கடந்த 18 ஆண்டுகளாக — தொடர்ந்தும் பணியாற்றி வருபவர்கள் அவர்கள்!

அமரர் அழகக்கோன் அவர்களை தங்கள் சார்பில் தேர்ந்தெடுத்து—தொடர்ச்சியாக 18 ஆண்டுகளாகப் பாராளுமன்றம் அனுப்பி—தமிழ் சமுதாயத்தின் விடுதலைக் குரலை முழங்கவைத்தவர்கள் அவர்கள்!

மன்னார் தொகுதி பின்தங்கிய ஒரு தொகுதி: அப்படிப்பட்ட தொகுதி முன்னேற வேண்டுமானால் ஆளுங்கட்சியுடன் மன்னார் தொகுதி எம். பி. சங்கமமாகியே தீரவேண்டும்; எனவே அழககோன் ஐயா, நீங்கள் ஆளுங்கட்சியுடன் சேருங்கள்: என்று எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கேட்டு, அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தாத அளவுக்கு அரசியல் தெளிவும், விடுதலை உணர்வும் கொண்டவர்கள் மன்னார் தொகுதி மக்கள்.

அது மட்டுமன்றி — தம்மைப் பதவி ஆசை காட்டி விலைக்கு வாங்க சிங்கள ஆட்சி முயன்றபோதெல்லாம்— அவர்களின் எண்ணத்தில் மண்ணைப்போட்டு, மன்னார் மக்களின் தன்மான வீரத்தையும் இலட்சிய ஆழத்தையும் எடுத்துக்காட்டியவர் அழகக்கோன்.

அத்தகைய விடுதலை வீரர் அழகக்கோனின் திடீர் மறைவு காரணமாக அந்த இடத்துக்கு புதியதொரு பிரதிநிதியை இத்திங்கள் 25ம் நாள் தெரிவு செய்யவிருக்கிறார்கள் மன்னார் தொகுதியின் தமிழ் பேசும் மக்கள்!

மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு மாத்திரமின்றி இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்குமே இந்த இடைத் தேர்தல் அதிமுக்கியமானதொன்றாகும்!

1972ம் ஆண்டு—தமிழ் பேசும் மக்களின், மொழி, இன, மத, அடிப்படை உரிமைகள் அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்து, அவர்களை இரண்டாந்தர நிலைக்கு தள்ளி அடிமைகளாக்கி அழித்தொழித்திட வழி வகுத்திடும் புதிய அரசியல் சட்டம் வந்த நாள் முதல் — அதற்கு முன்னர் அச்சட்டம் அரசியல் நிர்ணய சபையில் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து—அந்த அநியாயச் சட்டத்துக்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் தமிழர் கூட்டணியின் தலைமையின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகிறார்கள்

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் முன்வைத்து — தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காக தமிழர் கூட்டணி போராடிவருகிறது.

வாழ்வா — சாவா என்ற நிலையில் தமிழ் பேசும் மக்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டத்துக்கு வேகமும் வலிவும்—சேர்த்திடவும் ஆட்சியாளர் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக எடுத்துவரும் கொடூர நடவடிக்கைகளுக்கு சனநாயக ரீதியில் பலமான மரண அடி கொடுக்கக்கூடியதுமான ஓர் அருமையான வாய்ப்பு தமிழ் பேசும் பிரதேசத்தில் முதன் முதலாக மன்னாருக்கே ஏற்பட்டிருக்கிறது.

சனநாயக மரபுகளும், சம்பிரதாயங்களும், வழிமுறைகளும் இந்நாட்டில் கொலை செய்யப்பட்டு வரும் இந்நாட்களில், தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இலட்சிய முழக்கத்தை சனநாயக ரீதியில் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய ஓர் அருமையான வாய்ப்பு மன்னார் மக்களுக்கு கிடைத்திருக்கிறது.

புதிய அரசியல் சட்டம் வந்த பின்னர் — இந்நாட்டிலுள்ள 85 இலட்சம் தமிழ் தேசிய இனத்தின் உரிமை உணர்வை — விடுதலைக் கோரிக்கையை—முன்னெடுத்துச் செல்லக்கூடிய பெருமையும் மன்னார் மக்களுக்கே கிடைத்துள்ளது.

ஆம், தமிழர் கூட்டணியின் சார்பில் தமிழரசுக்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகின்ற திரு. யோன் மார்க் அவர்களுக்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்கும், தமிழ் சமுதாயத்தின் சுதந்திர வாழ்வுக்கு போடப்படுகின்ற வாக்கு; சிங்கள ஆட்சியும், சிங்களக் கட்சிகளும் தமிழ் சமுதாயத்துக்கு இழைக்கின்ற தீமைகளுக்கு வைக்கப்படுகின்ற வேட்டு, என்பதனை மன்னார் வாழ் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் உணர்ந்து தமது கடமையை கட்டுப்பாடாக செய்ய வேண்டும்.

மன்னார் தொகுதியில் இரண்டு—சுய இச்சைகள் போட்டியிடுகின்றன. சுய இச்சைகளால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை சுய இச்சைகளுக்கு போடுகின்ற ஒவ்வொரு வாக்கும் தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட சக்தியையும் கட்டுப்பாட்டையும் உடைக்கவே பயன்படும் என்பதை மன்னார் வாழ் தமிழ் மக்கள் உணரவேண்டும்!

'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்பது புறநானூற்றுப் புலவனின் வாக்கு இதை உணர்ந்து. சில்லறைகளான சுயேச்சைகளுக்கும், சிங்களக்கட்சியான யூ. என் பிக்கும் வாக்களித்து — தங்கள் சக்தியையும் பலத்தையும் சிதறவிடாது — தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கே கட்டுப்பாடாக வாக்களித்திட வேண்டும்!

சாதி, மத, பிரதேசப் பேதங்களை தகர்ந்தெறிந்து—பண்டாரவன்னியன், சாராயநாதன் போன்ற பிடாரிகளை வென்று தமிழரசுக்கட்சியை பல்லாயிர வாக்குகளால் வெற்றி பெறச்செய்து — தமிழ் சமுதாயத்தின் விடுதலைக் கொடியை மன்னார் வாழ் தமிழ் பேசும் மக்கள் முன்னெடுத்துச் செல்வார்கள் என்று ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் சேர்ந்து நாமும் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

## தமிழ் பேசும் மக்களின்

# சுதந்திர சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட எனக்கு வாக்களிப்பீர்!

## மன்னார் வாக்காளப் பெருமக்களுக்கு யோன்மார்க்கின் வேண்டுகோள்!

எதிர்வரும் (பெப்ருவரி) 25-ந் திகதி நடைபெறவிருக்கும் மன்னார்த் தொகுதிக்கான இடைத்தேர்தல், இந்நாட்டின் வரலாற்றில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததென்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை.

புதிய அரசமைப்புச் சட்டத்தின்கீழ் ஈழத் தமிழகத்தில் நடைபெறும் முதலாவதுதேர்தல்இதுஎன்பதால், உள்நாட்டிலும், வெளியிலும் இதுமிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அடக்குமுறைச் சிங்களப் பெரும்பான்மைக்கெதிராகதமிழ்ப் பேசும் மக்களின் தீர்ப்பு என்னவென்பதை இத்தேர்தல் முடிவு சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்டவேண்டுமென்பதே எமது நோக்கமாகும்.

### தலைவிதியை நிர்ணயிக்கும்

தென்னிலங்கையில் நடைபெறும் தேர்தல் சிங்களச் சகோதரர் மத்தியில் நடைபெறும் அதிகாரப் போட்டியாகவும், எமது பாரம்பரியப் பிரதேசமாகிய வடகிழ் மாகாணத் தொகுதியொன்றில் நடைபெறும் தேர்தல் எமது தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தலாகவும் அமைந்துவிட்டது. தமிழ்ப் பேசும மக்களாகிய எம்மைப் பொறுத்த வரையில் அதிகாரப் போட்டியில் பங்கற்றவர்களாக, ஓர் அடிமை இனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே, நாம் இத்தேர்தலை அணுகும் முறையே வேறு.

எமது சுயநிர்ணயசுதந்திர உரிமையை நிலைநாட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் மாபெரும் பொதுமக்கள் வாக்கெடுப்பாக — எமது உரிமைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக நடக்கவிருக்கும் இந்த இடைத்தேர்தலை நாம் அணுக வேண்டும்; இந்த நேரத்தில் தமிழ்ப் பேசும் மக்கள் கட்டுப்பாடான — கட்டுக்கோப்பான — அடிப்படைக் கொள்கைகளின்கீழ் இயங்கும் உறுதியான ஒரு தமிழ்க் கட்சியைத் தெரிவு செய்யவேண்டியது அத்தியாவசியமாகும்.

ஒரே குரலில் நமது சுதந்திர உரிமைக்கோரிக்கையை



வலியுறுத்த தமிழ்பேசும் மக்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு அணிவகுத்துவிட்டார்கள் என்பதைச் சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் மட்டுமல்ல, உலக அரங்கிற்கும் எடுத்துக்காட்ட வேண்டும்:

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரக்கோரிக்கை வலுப்பெற, இத்தேர்தலில் தமிழர் கூட்டணியின் ஆதரவில் தமிழரசுக் கட்சி வேட்பாளனாக நிற்கும் என்னை ஆதரிப்பதைத் தவிர மன்னார் வாக்காளர்கள் முன்னுள்ளமுடிவு வேறாக இருக்காது என்பது கட்சியினதும் எனதும் முழுத் தமிழ்ப் பேசும் மக்களினதும் நம்பிக்கையானமுடிவாகும்;

இத்தேர்தலில் எனக்குக் கிடைக்கும் சாதாரண வெற்றி ஒரு பொருட்டல்ல. முழு வாக்காளர்களும் வாக்கெடுப்பில் கலந்து, அதிகப்படி பெரும்பான்மை வாக்குகளால் கட்சிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுக்க வேண்டும் எனவே, வாக்காளர்பட்டியிலுள்ள ஒவ்வொரு புனித வாக்கும் தமிழ்ப்பேசும் மக்களின் சுதந்திர உரிமை பெறுவதென்ற புனித நோக்கத்திற்குப் பயன்பட வேண்டும்;

### வாக்குரிமையை பயன்படுத்துவீர்

தமிழ்ப் பேசும் மக்களில் சரிபாதிப்பேர் (மலையக மக்கள்) வாக்குரிமையற்றவர்களாக்கப்பட்டுவிட்டார்கள். எஞ்சியிருக்கும் வட — கிழக்கு மாகாணத் தமிழ்ப் பேசும் மக்கள் பல உரிமைகளை இழந்து விட்டார்கள். அவர்கள் இதுவரை இழக்காமலிருக்கும் ஒரே ஒரு உரிமை; வாக்குரிமைமட்டுந்தான். இந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தின் சில கட்டங்களைக் கடக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்;

எனவே, நடைபெறும்இவ்விடைத் தேர்தலில் நமது ஒவ்வொரு வாக்கும் மிகப் பெறுமதியானது ஒவ்வொரு வாக்குதானும் பயன்படுத்தப்படாமல் அவம்போக விடக்கூடாது;

எமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு பெரும்பான்மைச் சிங்களஇனத்திடமிருந்து அகற்றப்பட வேண்டுமானால், ஆளும் உரிமை எமக்கே அளிக்கப்பட வேண்டுமானால், தமிழ்ப் பேசும் இனத்தின் ஆட்சியை உருவாக்கும் பணி தமிழரசுக்கே — தமிழர் கூட்டணிக்கே கிடைக்க வேண்டுமானால், இத்தேர்தலில்

(7-ம் பக்கம் பார்க்க)

## செல்லத்தம்பு தலைமையில் மன்னாரில் தீவிர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பொதுத் தேர்தலாக இருந்தால் யூ. என். பி. ஆட்சிக்கு வரலாம் என்று பலர் நம்பினர். ரகீமுடன் போட்டியிட்ட திரு அழகக்கோன் சுகவீனம் காரணமாக தீவிரமாக மக்களிடையே சென்று ஆதரவு தேட இயலாதவராக இருந்தார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் தொகுதிகளில் நிற்கவேண்டியதாகவும் இருந்தது.

இந்த இடைத் தேர்தலின் போதோ ஜனாப் ரகீம் மன்னார் பட்டின சபைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். மன்னார் ப. ச. வும் கலைக்கப்பட்டு விட்டது. ஒரு எதிர்க் கட்சி என்ற அளவிலேயே யூ. என். பி சார்பில் அவர் போட்டியிடுகிறார்.

இம்முறை தமிழரசு சார்பில் போட்டியிடும் திரு. ஜோன்மார்க், அழகக்கோனை விட வயதில் இளையவர்; நோயற்ற உடம்பினர், மக்களை சென்று சந்தித்து ஆதரவு தேடிவருகிறார்.

ஏறத்தாழ 29,000 வாக்காளர்களைக் கொண்டது மன்னார்த்தொகுதி. இதில் 19,000 பேர் தமிழர்கள்; 9,700 பேர் முஸ்லிம்கள்; 711 பேர் சிங்களவர்கள்.

யூ. என். பி. வேட்பாளர் ரகீம் வெல்லவேண்டுமானால் 3,000 முதல் 4,000 வரை தமிழர்களின் வாக்குகளைப் பெற்றாக வேண்டும். ஆனால் இம்முறை அது ஒரு போதும் கை கூடப் போவதில்லை.

யூ. என். பி. பிரசாரக் கூட்டங்கள், இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுகிறது தமிழரசுக்கட்சியின் பிரசாரம் திட்டமிடப்பட்டு முறையாக நடைபெற்றுள்ளது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் என்று பிரிக்கப்பட்டு பிரச்சாரம் நடத்தப்பட்டுவருகிறது. அவர்கள் வாக்காளர்களைச் சந்தித்து வருகின்றனர் எங்கும் ஆதரவுகரைபுரண்டோடுகிறது.

எங்கும் — பல்வேறு கிராமங்களிலும் — கட்சிக் கிளைகளும் வாலிப முன்னணிக் கிளைகளும் நிறுவப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி—தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று நடைபெற்ற அட்டூழியத்தின் பின்னர்—தமிழ் மக்களின் அரசியல் அநாதரவான நிலை வெளியாகி விட்டது. இதன் காரணமாக மன்னார் தமிழ் மக்கள் புதிய விழிப்புணர்வு பெற்று—தமிழர் கூட்டணிக்கே—தமிழரசுக் கட்சிக்கே தங்கள் வாக்கு என்று முடிவு செய்து விட்டார்கள்.

யூ. என். பி. யின் தேர்தல் பிரசாரம் மக்கள் மனதில் துளியும் ஏறியதாக தெரியவில்லை. அவர்கள், ரொட்டு வேண்டுமா பாலம் வேண்டுமா என்று கேட்டு வாக்கு வேட்டையாடுகிறார்கள். ஆனால் தமிழ் பேசும் மக்களோ ரொட்டையும் பாலத்தையும் விட இன மொழி, உரிமைகளுக்காகபோராடும் தமிழரசுக்கட்சியின் பக்கமே நிற்கிறார்கள்;

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் இருவரும் மக்கள் மத்தியில் செல்லாக் காசாகவே கருதப்படுகிறார்கள். சுயேச்சை வேட்பாளரான செல்லத்துரை என்பவரை மக்கள் மத்தியிலே காணக்கூட முடியவில்லை; அடுத்தவர் காதர். இவர் கணிசமான அளவு முஸ்லிம் வாக்கைப்பெற முடியாவிடின், சென்ற முறையைப் போலவே இம் முறையும் கட்டுப்பணம் இழப்பது திண்ணம்;

தமிழரசுக் கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் மட்டுமன்றி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், திரு. எம். எஸ். செல்லச்சாமி, தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம், இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரதிநிதிகள் ஆகியோரெல்லாம் தமிழரசுக் கட்சி வேட்பாளருக்காக பிரசாரம் செய்து வருகின்றனர்;

எனவே மன்னாரில் தமிழரசுக்கட்சியின் வெற்றி நிச்சயத்திலும் நிச்சயம்;

# இஸ்லாமிய அறிஞர் இன்பத் தமிழில் பேசும்போதே இடையிட்டுத் தாக்கினர் பொலிசார்!

இலங்கையின் புதிய அரசியல் சட்டம் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டிருப்பதை நிரூபிக்கத் தமிழர் கூட்டணித் தலைவரும் காங்கேசன்துறைத் தேசியப் பேரவை உறுப்பினருமான தமிழர் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தேசியப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தார். அவர் பதவி துறப்பு ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு விடப்பட்ட சவாலாக அமைந்தது: காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடாத்த அரசு பலவித சாக்குப்போக்குகளைக் கூறித் தேர்தல் நடத்தாது காலங் கடத்திவருகின்றது. காங்கேசன் இடைத் தேர்தலில் தமிழ் மக்கள் தீர்ப்பு எப்படியிருக்குமென்பதை அரசு நன்கு அறிந்த பின்பே பின்போட்டுவருகிறது.

### சிறையில் தமிழ் இளைஞர்

எவ்வித காரணமுமின்றித் தமிழ் இளைஞர்கள் சிறை பிடிக்கப்பட்டு கண்டி போகம்பரைச் சிறையிலும், வெலிக்கடை, நீர்கொழும்பு சிறைகளிலும், தாய் தந்தையர் உற்றார் உறவினர் சென்று பார்க்கவாய்ப்பின்றி உணவளிக்கவசதியின்றி அடைக்கப்பட்டுள்ளனர். நீதி நியாயம் ஒன்று இருக்குமானால் இவர்கள் செய்த குற்றத்தை நாடறியச் செய்து, குற்றம் செய்திருப்பின் தண்டனை அளிப்பதே நடைமுறைப் படுத்தக்கூடியது. ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்த்து—நாட்டையே கைப்பற்ற எண்ணிய பயங்கரவாதிகளுக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனை வழங்கப்படுகின்றது. ஆனால் என்ன குற்றம் செய்தார்கள் தமிழ் இளைஞர்கள் என்று இதுவரை எடுத்துரைக்காது சிறையில் வைத்துச் சித்திரவதை செய்கிறது அரசு.

தமிழன் மண்ணில், தமிழ் மக்கள் அரசியல் கலப்பு எதுவுமின்றித் தமிழ் ஆராய்ச்சி நடாத்தியபோது திடுதிப்பென்று கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எறிந்தும் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தும் தமிழ் மக்கள் தமது மண்ணில் சுயேச்சையாக நடமாட அருகதையற்றவர்கள் என்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டி அவர்களைக் கதிகலங்க வைத்த பொலிசாரின் சண்டித்தனம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதும் சிறுவர் சிறுமியர் பெண்கள் சிந்தை கலங்கி, நிலைகுலைந்து சிதறிஓடியதும் தமிழ் மக்கள் ஒன்பதின்மர் அன்று இறந்ததன் மூலம் அகில உலகமும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் இன்றைய நிலையைத் தெட்டத்தெளிவாக உணரக்கூடிய நிலை என்றுமில்லாதவாறு இன்று ஏற்பட்டுள்ளது.

### தமிழ் பேசினால் அடி உதை

தமிழ் பேசுபவன், இந்துத் தமிழனாயிருந்தாலென்ன, இஸ்லாமியனாயிருந்தாலென்ன அவன் தமிழ் பேசும் ஒரே காரணத்திற்காக ஆட்சியாளரால் ஒதுக்கப்பட்டு வருவதையும், அடக்கப்பட்டு வருவதையும் தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நிகழ்ச்சி தெளிவாக்கியுள்ளது. திருச்சி அறிஞர்—அவர் இஸ்லாமியரானாலும் தமிழ் பேசியதனால் அவர் பேச்சு உணர்ச்சிகரமாக இருந்ததென்று கூறி அப்பேச்சைக் குழப்பி, அவர் பேச்சுச் சுதந்திரத்திற்கு வேட்டு வைத்த நிகழ்ச்சி இன்னும் தமிழ் மக்கள் மனதிலிருந்து இன்னும் பசுமை கெடவில்லை.

மேலே காட்டிய சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு தமிழ் மக்கள் சிங்கள ஏகாதிபத்தியத்திற்குத் தமது ஏகோபித்த எதிர்ப்பைக் காட்ட மன்னார் இடைத் தேர்தல் அரிய சந்தர்ப்பமாக அமைந்திருக்கின்றது. மன்னாரில் ஆட்சியாளர் ஒரு அபேட்சகரை நிறுத்த முன் வரவில்லைதான் ஆனால் தமிழ் மக்களின் உரிமைக்கு உலைவைத்த இன்னொரு கட்சி ஐ. தே. கட்சி போட்டியிடுகின்றது. புலி பசுத் தோலைப் போர்த்தினாலும் புலி புலிதான் என்பதை இத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் உணர்த்த வேண்டும்.

### சாட்டையடி கொடுங்கள்

தமிழ் மக்கள் சிங்களத் தலைமையை இனியும் ஏற்கமாட்டார்கள் என்பதையும் நிரூபிக்க—குடியரசைத் தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதை நிரூபிக்க இஸ்லாமியனானாலும், தமிழனானாலும், அவன் தமிழ் பேசுவதால் சகோதரன்தான் என்பதை நிரூபிக்க—தமிழர் கூட்டணிதான் தமிழ் பேசும் மக்கள் சார்பில் அங்கம் வகிக்க அருகதையுள்ளது என்பதை நிரூபிக்க மன்னார் தந்திருக்கிறது ஒரு வாய்ப்பு அவ்வாய்ப்பை பயன்படுத்தி மன்னார் வாழ் தமிழ் மக்கள் அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலென்ன, இந்திய வம்சாவளித் தமிழர்களாக இருந்தாலென்ன எல்லோரும் ஏகோபித்து தமிழர் கூட்டணி அபேட்சகருக்கே தமது பொன்னான வாக்குகளைப்போட்டு ஆட்சியிலுள்ளோருக்கும், ஐ. தே. கட்சியினருக்கும், ஆட்சியில் இருக்கும் அரசுக்கு வால் பிடிக்கும் தமிழர்க்கும் சாட்டை அடி கொடுப்பார்களென்றே இலங்கைவாழ் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

## புத்தொளி

## மன்னார் மக்களே! இதை உணர்வீர்! தமிழர் கூட்டணிக்கு வாகை சூடுவீர்!!

## உன்னாலாகும் சாதனை!

'தமிழே! என் பேச்சு
—அதுவே,
என் மூச்சு' என்ற
கொள்கைதனை—உன்
உடலில் பாய்ச்சு!

'தமிழ்த்தாய்
ஈன்றெடுத்த மக்கள்
நாம்!
அமிழ்தமான—நம்
மொழி' என்ற
வழியில் சென்றுவிடு!
இருக்காது,
உனக்குள் சிக்கல்!

உருவாக்கி விடு — தமிழ்
மக்கள் அரசு —அதன்
கருவாக்கி விடு
தமிழை.

நாட்டுக்காய் நடு
பயிரை,
தமிழுக்காய் விடு
உயிரை,
பாட்டுக்காய் எடு
தமிழை,
பரப்பி விடு
பாரினில் அதனை;
அப்பொழுதுதான்,
நாங்கள் பட்ட வேதனை;
உன்னாலாகும் சாதனை.

—ஏ: கே. ரஸாக்

# சிங்களக் குடியேற்றத்தால் மன்னாரை இழக்க நேரிடும்!

## சிங்களக்கட்சி வெற்றிபெற்றால் ஆபத்து! தமிழர் கூட்டணிக்கே வாக்களியுங்கள்!!

சுதந்திர இலங்கையின் அரசியலிலே தென் இலங்கையின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சிபீடம் ஏறுவதற்காய் பொதுத்தேர்தல்களில் மோதிக்கொள்ளுகின்றன. மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய இரு கட்சிகளும் ஈழத் தமிழ் இனத்தை அடிமை கொள்ள பல வழிகளில் அதிகாரத்தைப் பாவித்துள்ளன.

ஈழத் தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரை சிறீலங்கா கட்சி இரத்தப்புடையனானால் ஐக்கிய தேசியக் கட்சி முத்திரைப் புடையனாகும். இரத்தப்புடையன் கடித்தால் உடன் மரணம் முத்திரைப் புடையன் கடித்தால் இரண்டொரு தினத்தில் மரணம். எது கடித்தாலும் மரணம் மரணமே.

வடக்கைப் பொறுத்தவரை வவுனியாத் தொகுதியும் மன்னார் தொகுதியும் தமிழ்பேசும் பிரதேசத்தின் நுழைவாயில்களாகும் இந்த நுழைவாயிலை தமிழர் கூட்டணியின் வீரத்தளபதிகளே காத்து நிற்க வேண்டும். இடைத்தேர்தல் மூலம் மன்னாரைச் சிங்களக் கட்சியொன்று கைப்பற்றி விட்டால் ஆட்சியாளர் தாம் நினைத்தபடி வடக்கே ஆட்சி நடத்தலாம் இதனால்தான் மன்னார் இடைத்தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்த ஐ. தே. க. விற்கு விட்டுக்கொடுத்தது அம்மையார் கட்சி

அம்மையார் கட்சி (SLFP) ஐ. தே. கட்சி இரண்டினதும் கொள்கைதான் என்ன? சிங்களமே இலங்கை எங்கும் அரசமொழி, புத்த மதமே அரச மதம், தமிழ்பேசும் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் இந்தக்கொள்கைகளின் கீழ்தான் நண்பர் றகீம் அவர்கள் ஜே. ஆர். தலைமையிலான சிங்களக் கட்சியில் போட்டியிடுகிறார். நண்பர் றகீம் அவர்கள் வெற்றி பெற்றால் தென் இலங்கை சிங்களக் கட்சியின் தலைமைப் பீடத்தின் கட்டளைப் படிதான் ஆடவேண்டும்.

நண்பர் றகீம் அவர்கள் வெற்றி பெற்றால் தருணத்தைப் பயன்படுத்தி அம்மையார் பெடிகமை தொகுதியில் இருந்து 500 சிங்கள குடும்பத்தைப் பூநகரியில் குடியேற்ற முற்பட்டால் நண்பர் றகீம் அவர்களால் அதைத் தடுக்க முடியுமா? நண்பர் தடுத்தால் அம்மையார் ஜே. ஆரிடம் சொல்லுவார்—சிங்கள மக்களை மன்னாரில் குடியேற்ற மன்னார் பிரதிநிதி தடுக்கிறார் என்று; அதன் முடிவு என்ன? கட்சியில் இருந்து கல்தா! அதற்குப் பயந்து நண்பர் றகீம், அம்மையார் 500 என்றால் இல்லை இல்லை 5000 குடும்பங்களை குடியேற்றலாமே என சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

•எம். பி. பதவி மூலம் பேரும் புகழும் சுயநலமும் தேட சிங்களக் கட்சியின் தலைமையை நாடிய நண்பர் றகீம் கட்சியின் கட்டளைக்குப் பணிந்து இனத்தைக் காட்டிக்கொடுத்து பிரதேசத்தைவிற்று மொழியையும் மதத்தையும் சிங்களக் கட்சிக்கு அடகு வைக்கவேண்டியதுதான்!

வட்டுக்கோட்டை மேடையில் உடுப்பிட்டி சிவா அவர்களை அரை சபாநாயர் என்று பேசிய அமிர்தலிங்கமும் (தமிழ் அரசுக் கட்சி) உடுப்பிட்டி மேடையில் அமிர்தலிங்கத்தை தளர்பதி எனக் கூறிய சிவசிதம்பரமும் (தமிழ் காங்கிரஸ்) இரண்டு கட்சிகளையும் மேடையில் வசைமொழிந்த தொண்டமானும் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) எல்லாத் தமிழ் தலைவர்களையும் குற்றம் கண்ட சுந்தரலிங்கமும் (அடங்கா தமிழர் முன்னணி) ஒரே மேடையில் தோன்றி இன மத மொழி பிரதேச விடுதலைக்காய் அழைக்கிறார்கள் தமிழ் பேசும் இனத்தை தமிழர் கூட்டணியின் கீழ்:

இத் தமிழர் கூட்டணியின் அபேட்சகராய் போட்டி இடுபவர்தான் திரு. யோன் மார்க் அவர்கள். தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காய் அகில இலங்கை தமிழ் பேசும் இனமும் ஒன்று திரண்ட தமிழர் கூட்டணியின் அங்கமான தமிழ் அரசுக்கட்சி அபேட்சகர் திரு. யோன் மார்க் அவர்களை மன்னார் தொகுதி வாக்காளராகிய நீங்கள் உங்கள் மதம், மொழி, பிரதேசத்தின் பேரால் ஆதரித்து தெரிவு செய்யும்படி வேண்டுகிறேன்.

பி. மார்க்குப்பிள்ளை

## காவலன் செல்வா!

எம். பி. எம். முகம்மது காசிம் ஆலிம்
(விடத்தல்தீவு)

தமிழ்மொழி யுரிமை காக்க
தன்னுடல் பொருளாவி மற்றும்
குவிதனம் பதவி நீத்து
குன்றென தியாகம் பூண்ட
நிமிர்தடை யனைத்தும் தாண்டி
நேர்மைக்குச் சின்ன மான
கவிமழை அறிஞர் போற்றும்
காவலன் செல்வா தாமே

நரை திரை மூப்புக் கொண்டு
நடுங்கிய குரலின் பேச்சு
திரை நிரை படைகள் கேட்டால்
நெஞ்சமே கலங்கி யேங்கத்
தரையினில் தமிழின் துன்பத்
தளையறுத் துரிமை காட்டும்
வரையென வந்த செல்வ
நாயகம் பல்லாண்டு வாழி

பிறப்புடன் அம்மா வென்று
பேசிய தமிழை மாய்த்து
சிறப்பிலாச் சிங்க ளத்தை
செந்தமிழ் புகலும் வாய்க்குள்
திரப்பிடத் துணிந்த மாற்றார்
நெஞ்சகம் மயங்கும் வண்ணம்
விறைப்புடன் தமிழை யோதும்
வித்தகன் இலங்கை காந்தி

காந்தியின் அகிம்சை கண்ட
கருணையின் சாந்த மூர்த்தி
நாம் தினம் பேசும் பாஷை
நற்றமிழ் வடிவ மானோன்
ஏந்திய ஈழ நாட்டில்
எம்தமிழ் சிறுமை நீங்க
சாந்தியாய் வழிகள் காட்டும்
சற்குணன் செல்வா வாழி!

# "சனவரி 10ல் பொலிசார் நடந்து கொண்ட விதம் தேசத் துரோகமானது!"

## பிரதமருக்குத் தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கத்தின் உறைப்பான கடிதம்!

சனவரி 10 சம்பவங்கள் பற்றி பிரதமருக்கு அரசாங்க தமிழ்த் தட்டெழுத்தாளர் சங்கம் உறைப்பான கடிதம் ஒன்றைத் தீட்டியுள்ளது. அக்கடிதம் வருமாறு:-

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் வெளிநாட்டிலிருந்து வந்த தமிழ் கற்ற அறிஞர்களைப் பொது மக்களுக்கு அறிமுகம்செய்து வைக்க ஏற்பாடாகிய கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும், சுற்றுவட்டாரங்களிலும் நிறைந்திருந்தனர். இந்நேரத்தில் பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்கக் கூட்டம் வெளி மைதானத்தில் நடைபெற்றது.

கூட்டம் தொடங்கிச் சில நிமிடங்களில் ஆயுதம்தாங்கிய பொலிசார், அவ்விடம் வந்து வீதி எங்கும் நிறைந்திருந்த மக்களை வழியை விட்டுத் தரும்படி எந்தவித கோரிக்கையும் விடுக்கவில்லையென்பதையும் அல்லது கூட்டத்தையும் அல்லது கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களைத் தொடர்ந்தும் கூட்டத்தை நடாத்தாது தடுக்கவில்லையென்பதையும் அன்று திரண்டிருந்த சகலரும் நன்கறிவர். இதில் எதையாவது ஒன்றைச் செய்திருந்தால் 10ஆம் திகதி யாழ்நகர் இவ்வளவு உயிர்ச்சேதங்களையும், பதற்றநிலையையும் கண்டிருக்கமாட்டாது.

### திட்டமிட்ட தாக்குதல்

பொலிசார் திடீரென்று நுழைந்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசிப் பின், பொதுமக்களைக் குறிப்பாக பெண்களையும், குழந்தைகளையும் குண்டாந் தடியால் மூர்த்தண்யமாகத் தாக்கி விரட்டியடித்தார்கள்; இதறுண்டு ஓடியவர்களில் சன நெரிசலில் இறந்தோர் பலர். கட்டிய சேலைகளையும், சட்டைகளையும் இழந்து மானத்தைக் காக்க ஓடி ஒதுங்கிய பெண்கள் எத்தனையோ பேர். காயமடைந்தோர் இன்னும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார்கள். இன்னும் எத்தனையோ பேர் தங்கள் குடும்பத்திலுள்ள ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் காணாது தேடித் தவித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

இக்கூட்டம் உண்மையில் பொலிசாரின் அனுமதியின்றிச் சட்டவிரோதமாக நடைபெறுகிறது என அறிந்திருந்தால் சாதாரண பொதுமக்கள் பெண்கள் உட்படப் பலர் இப்படிப் பெருந்தொகையாகக் கூடியிருக்கவே மாட்டார்கள். தவிர கட்டடத்திற்கு வெளியே ஒலிபெருக்கி வைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதும் பொதுமக்கள் வெளியே நின்று பேச்சுக்களைக் கேட்பதற்கு அதிகாரிகளின் தடையோ, எதிர்ப்போ இருக்கவில்லை என்பதை நன்கு காட்டுகின்றது. எனவே, மக்களை அவ்விடத்தில் கூட்டமாக நிற்க வேண்டாம் என்று ஆரம்பத்திலேயே தடுக்காமல் விட்டது பொலிசார் ஏற்கனவே பொதுமக்களைத் தாக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை உருவாக்குகின்றது.

### ஜனநாயக விரோதம்

மக்கள் பொலிசாருடன் போரிடுவதற்கென்று எந்தவொருவரும் ஆயத்தமாக வரவேண்டியதற்கான சாத்தியக்கூறே அன்றியும், அரசாங்கத்திற்கு எதிராக எந்தவித சுலோகங்களும் எழுப்பப்படவில்லை என்பதனை இதில் கலந்துகொண்ட சகலரும் சான்று சொல்வார்கள். எது எவ்வாறுகிலும் மக்கள் கலைந்து செல்வதற்கு ஜனநாயக மரபிற்கேற்ப உயிர்ச்சேதமும், காயங்களும் ஏற்படாமல் பல வழிகளைக் கையாண்டு, கூட்டத்தை ஒரு அமைதியான முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம்.

பொலிசாரின் இத்திடீர் நடவடிக்கை மக்களை, மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படையச் செய்விக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்யப்பட்டவையென ஐயப்படவேண்டியுமுள்ளது. ஏனெனில் வெளிநாட்டு வானொலிச் செய்திகளின்படி பொலிசாரே குழப்பத்திற்கு முக்கிய காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் பங்கு பற்றிய வெளிநாட்டவர்களுக்கு, இது ஓர் இனத்தினை அடக்கியொடுக்கும் கொள்கையினைக்கொண்ட அரசாங்கம் எனக் கருதுவதற்கு முழுமையாக இடமளிக்கிறது.

எனவே, இச்சம்பவங்களுக்கு முக்கிய காரணமாக இருந்தவர்களை, தாங்களின் மற்றைய பல, தேசவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களின் மீது எவ்விதம் நடவடிக்கை எடுத்து அமைதியை நிலை நாட்டினீர்களோ அதே போன்று இச்சம்பவங்களுக்கும், மூல காரணமாக இருந்தவர்களை, தங்களின் தகுந்த நடவடிக்கையால் மட்டுமே தேடிக் கண்டு பிடித்து தகுந்த தண்டனை கொடுக்க முடியும். இப்படிச் செய்வதன் மூலமே இது போன்ற ஜனநாயகவிரோத சம்பவங்கள் வருங்காலத்திலும் ஏற்படாதிருக்கச்செய்யலாம் என்று நம்புகின்றோம்.

## ஏது குறை சொல்லுங்கள்!

— சுந்தவன்னியசிங்கம் —

உரிமைக்கு உயிர் ஈயும்
உலகு புகழ் தமிழினத்தின்
பெருமைகளை நினைவூட்டும்
பெருவிழாவாம் தமிழ் விழாவை
ஈழத் தமிழகத்தின் —
இனிய தலைநகரில்
நடத்தி
வேழத் தமிழர்களின்
வீரமிகு பண்பாடு—பாரீர்
இதுவென்று
பறைசாற்ற
நீயும் நின் அன்பர்களும்
பட்டுவிட்ட துன்பங்கள்
பலகோடி என்றாலும்
உண்மையிலே உங்களைப்போல்
உறுதியுடன் உழைப்பவர்கள்
உண்டென்றால்—இங்கு
கண்ணைப்போல் எம் தமிழைக்
காத்திடலாம்—ஐயமில்லை
தன்னைப்போல் தமிழ்தன்னை
நேசிக்கும் தமிழினத்தில்
புண்ணைப்போல் புரட்டர்கள்
சிலர் இங்கிருந்திட்டாலும்
வித்தி! உங்களைப்போல்
ஒரு சிலர் இங்கிருந்திட்டால்
எங்களைப் போல
தமிழர்க்கு
ஏது குறை சொல்லுங்கள்.

## நாலுதிசைகளிலுமிருந்து எழுந்த கண்டனத் தீர்மானங்கள்!

### அரசாங்க எழுது வினைஞர் சங்கம் தீர்மானம்!

(1) நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் பொதுக் கூட்ட நிகழ்ச்சியின் பொழுது யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டப முன்றலில் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த அப்பாவி மக்களின் மீது கட்டவிழ்த்து விட்ட தாக்குதலை நடாத்தி ஒன்பதுபேர் உயிர் துறக்கவும், பலர் படுகாயங்களுக்கு ஆளாகவும், ஆயிரக்கணக்கானோர் உடைமைகளை இழக்கவும் காரணமாக இருந்த பொலிஸாரின் கொடூரமான நடவடிக்கைகளை அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வன்மையாக கண்டிக்கும் அதே வேளையில் தகுதி வாய்ந்த ஓர் ஆணைக்குழுவை நியமித்து ஜனநாயகத்திற்கும், சமதர்மத்திற்கும் முற்றிலும் முரண்பட்ட நடவடிக்கைகளுக்குபொறுப்பாக விருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதில் அரசாங்கம் காட்டும் அசிரத்தைகளை ஆழ்ந்த வருத்தத்துடன் உற்று நோக்குகின்றது.

(2) நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இந் நாட்டில் நடைபெறவிடாது ஆட்சிப் பீட ஆதரவாளர்கள் சிலர் திட்டமிட்டு நடாத்திய சதிகளை எல்லாம் முறியடித்து, ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அனைத்துலக அறிஞர்கள் அனைவரும் உளமாரப் போற்றும் வண்ணம்-மாநாட்டைத் திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடாத்தியதன் மூலம், இந் நாட்டுத் தமிழ் மக்களின் பாரம்பரியம் வாய்ந்த பெருமையினையும், உணர்வுகளையும் சர்வதேச அரங்கில் நிலைபெறச் செய்து — வரலாறுபடைத்த அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் அமைப்பாளர்களை உளமாரப் பாராட்டும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் யாழ்ப்பாண நகர பிதாவும் அவரது சகாக்களும் குறுகிய அரசியல் இலாபம் கருதி மாநாட்டு அமைப்பாளர் மீது வேண்டுமென்று அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்குடன் விடுத்து வரும் உண்மைக்கு மாறான அறிக்கைகளை முற்றாக நிராகரிக்கின்றது.

(3) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பொழுது தமிழ்மொழிக்காகத் தம் இன்னுயிர் நீத்த பதினொரு வரும் இந் நாட்டுத் தமிழ் மக்கள் வரலாற்றில் அழியா இடம் பெற்றதியாகிகள் என அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில் அன்னாரின் குடும்பங்களுக்கு அனைத்துலகத் தமிழாராய்ச்சி கழக இலங்கைக் கிளையும், கொழும்பு தமிழ் சங்கமும் இதற்கென கூட்டாக ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்குவதெனத் தீர்மானிக்கின்றது.

### காவலூர் இளைஞர் பேரவை கண்டனம்

யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியின் போது நடைபெற்ற பொலிசாரின் வெறியாட்டம்சம்பந்தமாக காவலூர் இளைஞர் பேரவையின் சார்பாக அதன் தலைவர் திரு. அ. ப. இன்பருஜன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:—

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியின் போது தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய மிருகத்தனமான குரூரத் தாக்குதலால் ஒன்பது பேர் உயிரிழந்தார்கள். பலர் படுகாய முற்றார்கள். ஏராளமானோர் தங்கள் உடைகளை, உடைமைகளை இழந்தார்கள்.

இந்த வெறியாட்டத்தின் போது ஏற்பட்ட உயிர் நஷ்டம், பொருள் நஷ்டம்மான நஷ்டம் என்பன வற்றுக்கு பொலிசாரின் திட்டமிடப்பட்ட செயலே காரணம் என்று நாம் திடமாக நம்புகின்றோம்.

எனவே பொலிசாரின் இந்த மிலேச்சத்தனமான செயலை நாம் கண்டிப்பதோடு இதனால் பாதிக்கப்பட்ட சகலருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் இத்தால்தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது பிரதமர் இது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் சாதிப்பதற்கும் உயிரிழந்தோருக்கு அனுதாபம் கூடத் தெரிவிக்காமல் இருப்பதற்கும், நாம் எமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### இளம் எழுத்தாளர் ஒன்றியத்தின் கண்டனம்!

இளம் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் அதன் அமைப்புச் செயலாளர் திரு. வே. திருநாவுக்கரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

யாழ்ப்பாண மாநாட்டின் பின்னர் நடைபெற்ற சோக நிகழ்ச்சிகள் கேட்டு அதிர்ச்சியும், மனவேதனையும் அடைகிறோம்.

ஆட்சி பீடத்தில் இருப்பவர்களின் அக்கறையற்ற போக்கினால் கூலிப்படைகளின் காட்டுமிராண்டித்தனத்தால் சாந்த பூமியில் இரத்தக்கறைபடிந்திருக்கின்றது.

பாதுகாவல் துறையினர்க்கு பொறுப்பானவர் என்ற முறையில் இந்த உயிர்ச்சேதங் கட்குப் பிரதமர் அவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

இந்த அநாகரீகமான செயலை எமது ஒன்றியம் பலமாகக் கண்டிக்கின்றது. பொலிசாரின் அலட்சிய மனப்பான்மையையும், பொறுப்பற்ற நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த நிலையில் அரசு தமிழர் கட்குப் பாதுகாப்பாக இல்லை என்று குற்றம் சாட்ட வேண்டிய நிலையில் உள்ளோம்.

போலிச் சமாதானங்களால் அரசு இனிமேலும் தமிழர்களை ஏமாற்ற நினைத்தால் அது தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொள்வதாகவே இருக்கும்.

எதிர்பார்க்கப்படும் பாதுகாப்பினை அரசு வழங்காவிடில் தமிழர்கள் தங்களைப் பாதுகாப்பின்மையை உணர்ந்து தமது பாதுகாப்பினை தாங்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

### ஆசிரியர் சங்கம் கண்டனம்!

இலங்கை ஆசிரியர் சங்க கிழக்குப் பிராந்திய செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு. பிரின்ஸ் காசிநாதர் அவர்களின் தலைமையில் அரசடி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ் தமிழாராய்ச்சிமகாநாட்டின்இறுதி நாளன்று வெளிநாட்டு அறிஞர்களுக்கு நடைபெற்ற பிரிவுபசார விழாவில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிப்பதுடன் இச் சம்பவம் பற்றி விசாரணை செய்ய பகிரங்க விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முன்வர வேண்டும் என்ற தீர்மானம் திரு அல்போன்ஸ் மேரி அவர்கள் பிரேரிக்க திரு. மாசிலாமணி அவர்கள் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறியது. உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மிலேச்சத்தனமான

(8-ம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் தமிழரசு வெற்றி உறுதி! உறுதி!!

## யானையை விரட்டிட மக்கள் தயார்! தயார்!!

## வவுனியா பா. உ. தலைமையில் நடந்த பிரச்சார இயக்கம் பூரண வெற்றி!

வவுனியா பா. உ. சிம்மக்குரலோன் திரு. சே மா. செல்லத்தம்பு அவர்களின் சீரிய தலைமையின்கீழ் நடைபெற்றுவரும் தமிழரசுக்கட்சியின் பிரச்சார வேலைகள் பூரண வெற்றி பெற்றுள்ளன. இதன் பயனாக ஜோன் மார்க் அவர்களின் வெற்றி இப்போதே உறுதிசெய்யப்பட்டுவிட்டது.

மன்னார்த் தொகுதியில் இரவும் பகலும், முழு நேரமாக தமிழரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் தீவிர பிரச்சாரம் செய்து வருவதன் காரணமாக தமிழ்பேசும் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வு எங்கும் கரைபுரண்டோடுகிறது. இதன் காரணமாக யானைக் கட்சி படுதோல்வியடைவதும், தமிழர்கூட்டணி வேட்பாளர் திரு. ஜோன்மார்க் வெற்றிபெறுவதும் இப்போதே உறுதியாகிவிட்டது!

ஐ. தே. கட்சி வேட்பாளர் சென்ற அநேக இடங்களில் எல்லாம் 'தமிழ்பேசும் மக்களைக் கூறுபோடாதே — திரும்பிப்போ' என்று மக்கள் முழக்கமிட்டிருக்கின்றனர்.

தமிழ்பேசும் இளைஞர்கள் சுறுசுறுப்புடன் தமிழரசுக் கட்சிக்கான பிரசசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். வவுனிக்குளம், பனங்காமம், நட்டாங்கண்டல், போன்ற இடங்களில் ஆதரவுகோரி தமிழரசார் சென்றபோது எங்கும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் வரவேற்றனர்.

யானைக் கட்சியின் கோட்டையெனக் கூறப்பட்ட நாணட்டான் பகுதியில் அக்கட்சிக்கு இருந்த செல்வாக்கு தவிடுபொடியாகி விட்டது. தமிழரசுக் கட்சிக்கே எம் வாக்கு என்று அவர்கள் உறுதியுடன் கூறிவிட்டனர். நாணட்டானில் திரு. தங்கத்துரை பா. உ. வும், திரு பீட்டர் பொன்கலனும் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை ஐ. தே. கட்சியின் மொழி, மதக்கொள்கைகள் என்ன? அதை பகிரங்கப்படுத்துங்கள் என்று திரு. செல்லத்தம்பு கூட்டங்கள் தோறும் ஐ. தே. கட்சிக்கு விடுத்த சவாலுக்கு இதுவரை அக்கட்சியின் சார்பில் சரியான விளக்கமோ, பதிலோ தரப்படவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது

மன்னார் தேர்தல் களத்தில் தமிழரசுக்கட்சியின் பிரச்சார வேலைகளில் பொறுப்பாக ஈடுபட்டுள்ள தலைவர்களும் தொண்டர்களும் வருமாறு:-

பொது நிர்வாகம் — அலுவலகம் — திரு. சே. மா. செல்லத்தம்பு பா உ;

### மன்னார் பட்டணம்

தாழ்வுபாடு— திரு. பா. நேமிநாதன் பா. உ.
பேசாலை — தலையன்னார் — திரு. வி. தருமலிங்கம் பா. உ.

நாணட்டான் மேற்கு-திரு. அ. தங்கத்துரை பா. உ. திரு த. ம. பீற்றர் பொன்கலன்ட்.

நாணட்டான் கிழக்கு: திரு. கே. துரைரத்தினம், பா. உவும் முருங்கன் வாலிப முன்னணியும்.

மாந்தை வடக்கு: திரு. வி. என். நவரத்தினம், பா. உ திரு. செபமாலை திரு: சௌந்தரநாயகம்.

மாந்தை தெற்கு: திரு. துரைரத்தினம், பா. உ.

வவுனிக்குளம்: திரு. மு. ஆலாலசுந்தரம்:

### விடத்தல் தீவு

திரு. வே. கைலாசபிள்ளை.

### வங்காலை

திரு. ரேச்-டிவாஸ். திரு. வேதம் குறூஸ் (கி; ச. தலைவர்)

### இரணை இலுப்பைக்குளம்

திரு. பாக்கிய நாத உடையார்.

பசலம் பிட்டி: திரு: சிவகுரு.

## அனுதாபம்

சுதந்திரன் அலுவலகத்தில் பணியாற்றும் திரு. வி. முத்துக்குமார் அவர்களின் 17 வயதே நிறைந்த சகோதரன்செல்வன் வி. சுந்தரம்பிள்ளை துரதிருஷ்டவசமாக அண்மையில் காலமானார். சகோதரரைப் பிரிந்து துயருறும் திரு. குமாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சுதந்திரன் ஊழியர்கள்தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

## இலண்டனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''தாய்மொழியைக் காக்கத் தம்முயிரைத் தியாகம் செய்தனர் இளைஞர்கள். தாய்க்குலத்தின் மானம் காற்றில் பறக்கடிக்கப்பட்டது. காவலரின் குரூரத் தாக்குதலால், பலாத்கார வெலமத்தனத்தால் பெண்கள் குழந்தைகள் முதியவர்கள் கடுந் தாக்குதலுக்கு ஆளானார்கள்.

''காரணமேதுமின்றி சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர் கலக்கற்ற வீரத் தமிழ் இளைஞர்கள்! இத்தகைய நிலை மீண்டும் நம் கண்ணின் எழாது தடுப்பதற்கு நாம் உடன் தகுந்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

''சனவரி 27ம் நாள் ஞாயிறு மாலை, 6 மணிக்கு 'வெஸ்ட் மினிஸ்டர் போய்ஸ் ஸ்கூலில்' நடைபெறும் மாபெரும் கண்டனக் கூட்டத்திற்கு அனைவரும் திரண்டு வருக!''

பெப்ரவரி 10ம் நாளும் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த தமிழ்த் தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்து இலண்டன் வாழ் தமிழர்கள் ஊர்வலமும் கூட்டமும் நடத்தினர் ஊர்வலம் ''எம்பாங்மென்ட்'' என்னும் இடத்தில் ஆரம்பமாகியது.

## தமிழ் அவமதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடைய முதல்வரவர்கள் அறிக்கை விட்டார்கள்; அதைப் பாராட்டுகிறேன்.

திரும்பவும் முதலமைச்சரவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது சர்வதேசப் பிரச்சினை— அங்கு தமிழ் அவமதிக்கப்பட்டிருக்கிறது. அது யாழ்ப்பாண மக்கள் மீது மட்டும் எடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல. உலகம் முழுவதிலுமிருந்து வந்திருந்த தமிழ்ப் புலவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

முதல்வர் அவர்கள் யாழ்ப்பாணம் நிகழ்ச்சி பற்றி தகவல் தேவையென்று அறிக்கை விட்டதோடன்றி அதனை வலியுறுத்தி இந்தியப் பிரதமருக்கு கடிதமும எழுத வேண்டும்.

''இந்த நிலையில், அண்மையில் தமிழகம் வந்த இலங்கைப்பிரதமரை, நம்முடைய முதல்வரவர்கள் விமான நிலையத்திற்கு சென்று வரவேற்றிருக்கிறார்கள். வந்த விருந்தினரை வரவேற்பது உயர்ந்த பண்பாடு என்பது எனக்கு புரிகிறது. ஆனால் ஏனோ அதைப் பாராட்ட என்னால் முடியவில்லை அதே நேரத்தில் அதைக் குறை சொல்லவும் எனக்குத் துணிவில்லை அதை இத்துடன் விட்டுவிடுகிறேன் ''

—இவ்வாறு 29. 1. 74ல் தமிழக சட்ட மன்ற மேலவையில் ஆளுனர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேசிய தமிழரசுக்கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். (நன்றி: செங்கோல)

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்)

புதிய அரசியல் சட்டம் பற்றித் தமது தீர்ப்பை அளிப்பதற்கு காங்கேசன் துறை தொகுதி மக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காது கடந்த 16 மாதங்களாக சனநாயகத்துக்கு விரோதமாக அரசாங்கம் நடந்து வருகிறது.

தமிழ் இளைஞர்களை விசாரணை ஏதுமின்றி கடந்த பல மாதங்களாக சிறைப்பிடித்து வைத்திருக்கிறது, இந்த அநியாயங்களை எதிர்த்தும்— தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழர் கூட்டணி சனநாயக முறையில் போராடிவருகிறது.

இத்தகையசந்தர்ப்பத்தில் வந்திருக்கிற மன்னார் இடைத்தேர்தல் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளுக்கு எதிராக சனநாயக முறையில் பலமான அடிகொடுப்பதற்கு நல்லதோர் வாய்ப்பாகும்:

யூ: என்: பி: யும் சரி வேறு எந்தச் சிங்களக் கட்சிகளும் சரி, தமிழ் பேசும் மக்களுக்காக பேசவோ, போராடவோ ஒரு போதும் முன்வராது. சுயேச்சை வேட்பாளர்களாலும் ஒரு வித பிரயோசனமுமில்லை. இவர்களால் தமிழ் பேசும் மக்கள் அலுப்புப்பட்டுப் போகக்கூடாது இதை மன்னார் வாழ் மக்கள உணர வேண்டும்.

1956ம் ஆண்டிலிருந்து — சாதி, மத, பிரதேச வேறுபாடுகளின்றி தமிழரசுக் கட்சி வேட்பாளரையே தொடர்ச்சியாக தெரிவு செய்துவந்திருக்கும் மன்னார் தொகுதி தமிழ் பேசும் மக்கள் இவ்விடைத்தேர்தலிலும், தமிழ் அரசுக் கட்சி வேட்பாளரையே அதிகப்படியான வாக்குகளினால் தெரிவு செய்து — தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட உரிமைக் குரலை உலகறிய செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன.

## இது மாசி மாதம்....! பின்பனிக்கலாம்!!

''தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் அதிக அளவு சலுகைகளை யளித்துள்ளது.''

—செல்லையா குமார சூரியர்

(திருகோணமலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியது)

''பாரதி பாடலைப் பாடி, மொழி வெறியை இன வெறியை யூட்டி அரசியலை வளர்க்க நான் விரும்புபவனல்லன்.''

—ஆ: தியாகராசா. ப: உ.

## சுதந்திர......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிக்கு நிற்கும் யூ.என்: பி. அபேட்சகரையும் மற்றும் இரு சுயேச்சைகளையும் படுதோல்வியடையச் செய்வதைத் தவிர, எம்முன் நிற்கும் பணி வேறில்லை இந்த இலட்சியமே எமது இதயகீதமென்பதை ஆட்சியாளருக்கு மட்டுமல்ல, சிங்களச் சகோதரர்களுக்கும் வெளியுலகம் அனைத்திற்கும் நாம் ஆணித்தரமாக தெளிவாக்கிவிட வேண்டும். இந்த உண்மையை நிரூபிக்க எமக்குக் கிடைத்துள்ள ஒரு அரிய சந்தர்ப்பமே நடக்கவிருக்கும் இந்த இடைத்தேர்தலாகும்,

தனிப்பட்ட குரோதங்களோ, விரோதங்களோ, சிரமங்களோ, வசதியீனங்களோ ஒரு பேரினத்தின் கடமைக்குப் பெரிதல்ல.

எனவே, மன்னார் வாக்காளப் பெருமக்களை மீண்டும் அதிவிநயத்துடன் வேண்டுகிறேன்;

நமது வாக்கெடுப்பு நன்னாள் பெப்ருவரி 25-ம் நாள் அப்பொன்னாளில் முதற்பணியாக வாக்களிப்பு நிலையங்களில் நூற்றுக்கணக்காகத் திரண்டு, எமக்கு — தமிழரசுக் கட்சிக்கு — தமிழர் கூட்டணிக்கு வாக்களித்து, தமிழ்ப்பேசும் இனத்தின் மகத்தான எதிர்காலத்துக்கு வழி அமையுங்கள் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

''தமிழ்ப்பேசும் மக்களுக்கு வேண்டுவதும் ஒரு வீடு!;

தமிழரசுக் கட்சியின் சின்னம் ஒரு வீடு!''

## 'திருநடனச் செல்வர்' சிவராத்திரி இலவச வெளியீடு

மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு 'திருநடனச் செல்வர்'—சிவராத்திரி மலர் (மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்; விநாயகர் கவசம்; சிவார்ச்சனைத் திருப்பதிகம்; நடராஜப் பத்து; சிவபுராணம் முதலிய சிறப்பு அம்சங்கள் அடங்கின) பக்தர்களின் நன்மை கருதி அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

இதனைப் பெற விரும்பும் அன்பர்கள் நேரிலாயினும் அல்லது தமது சொந்த விலாசமெழுதி, 15 சத முத்திரை ஒட்டிய தபால் உறையையாயினும் அனுப்பிக் கீழ்க்காணும் விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நா. பொ விநாயகமூர்த்தி அன்ட் சன்ஸ் 155, செட்டியார் தெரு, கொழும்பு-11

கிளை:- கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.

## அவனும் மானத்தமிழ் மாணவனே!

கடந்த 8ம் திகதி நடந்த கல்லூரிப் பகிஷ்கரிப்பின் போது, முன்ளியவனை, வித்தியானந்தாவின் வரவை ஒரே ஒரு மாணவன் மட்டும் பூர்த்திசெய்தான் என்று வெளியான செய்தி தவறானத் தெரியவருகின்றது.

குறிப்பிட்ட அந்த உயர்தர மாணவன் பொறளையில் தமிழன் என்ற வார்த்தையைக் கண்டு கொதித்தெழுந்து நிருபர் மீது பாய்ந்து தமிழன் தான் என்பதை வலியுறுத்திவிட்டான்.

அந்த மாணவன் பாடசாலை சென்றதேன்? என்பதை மாணவரணித் தலைவன் தவராசன் குறிப்பிடுகையில், அது அந்தரங்கமானது என்றதுடன், உள்ளத்தாலும் உணர்வாலும் அவன் தமிழனே—என வலியுறுத்தினார்.

சேவை

''சேவையிற் செலவான சீவியமே பயனுள்ள சீவியம்.''

— மகாத்மாகாந்தி.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி காந்தியடிகளின் கவின்மொழிகள் என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# சிங்கள 'அனுரா' சுழும் தமிழன் விடுதலைக் கீதமும்!

நீக்ற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன'— என்று காலஞ்சென்ற கோப்பாய் கோமான் அமரர் வன்னியசிங்கம் அடிக்கடி கூறுவார்.

யாழ்ப்பாணம் சென்றிருந்த அனுரா பண்டாரநாயகாவின் காலை நக்கி, அவர் சென்ற இடமெல்லாம் கூடவே திரிந்து — அவருக்கு தெண்டனிட்டு பூசித்து — படைக்கவேண்டிய விருந்தெல்லாம் படைத்து—தமிழ் சமுதாயத்துக்கு அவமதிப்புத்தேடிய நக்கிப் பிறவிகளை எண்ணும்போது, அமரர் வன்னியரின் மேற்கண்ட பொன்மொழியே நமக்கு நினைவுக்கு வந்திடுகிறது.

இவர்களை போன்றவர்களைப்பார்த்துத் தான் பாரதியும் பொறுக்க முடியாத நிலையில் 'நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு என்று பாடினார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்தில் அனுரா பண்டாரநாயகா யாழ்ப்பாணம் சென்றிருக்கிறாரென்பதை தமிழினம் எண்ணிப் பார்க்கவேண்டும்!

## சந்தர்ப்பம்

சனவரி 10ம் திகதி தமிழாராய்ச்சி மாநாட்டில் நடைபெற்ற அட்டூழியக் காட்சிகள் இன்னும் நம் மனதை விட்டு அகலவில்லை — அது என்றும் அகலாது!

பல தமிழர்கள் தங்கள் உயிரையே இழந்தனர் அவர்களை இழந்த குடும்பங்களின் கண்ணீர் இன்னும் நிற்கவில்லை!

அன்று பொலிசாரின் அட்டூழியத்தால் சேலைகள் இழந்து மானமிழந்த தமிழ்ப் பெண்களின் வேதனை இன்னும் தீரவில்லை!

தமிழ் சமுதாயத்தின் உள்ளக்கொதிப்பு இன்னும் அடங்கவில்லை!

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தான்—

தமிழ் மக்கள் துடிதுடித்துப் பதைத்திட தாக்கப்பட்டதுகுறித்து—உயிர் இழந்தது குறித்து — பண்பு கருதியாவது அனுதாபம் தெரிவித்திட முன்வராத பிரதமரின் மகன் அனுராபண்டாரநாயகா யாழ்ப்பாணம் போயிருக்கிறார்!

ஏதோ சக்கரவத்தினியின் புதல்வனை வரவேற்பதுபோல—முடிக்குரிய இளவரசரை வரவேற்பதுபோல— குடை கொடி ஆலவட்டம் விசி நிலபாவாடை விரித்து — வரவேற்றிருக்கிறார்கள் தமிழினத்தை விலைபேசி விற்றுவரும் யாழ்ப்பாணத்திலுள்ள துரோகிகள்! அம்மையாரின் அடிமைப் பிறவிகள்!!

அம்மையாரின் ஆணைப்படி அனுராவை வரவேற்க கொழும்பிலிருந்து தலைமைத் தரகரும் சென்றதாகக் கேள்வி!

## கண்ணீரும் பன்னீரும்

தன்மானம் மிக்க தமிழ்ப் பொது மக்கள் யாரும் அனுரா வந்த பக்கம் தலை காட்டக் கூடவில்லையென்பதை நாம் அறிவோம்!

எலும்புத் துண்டுக்காக இனத்தைக் காட்டிக்கொடுத்து வரும் இழி பிறவிகள் தாம்—தமிழ் சமுதாயத்தின் அசல் வித்தில் தோன்றாத தறுதலைகள்தாம் — அனுராவுக்கு ஆலவட்டம் விசி, பன்னீர் தெளித்து இருக்கிறார்கள்!

தமிழ் சமுதாயத்தை கண்ணீரில் ஓடவைத்த கும்பலைச் சேர்ந்தவருக்கு தமிழ்த்துரோகிகள் பன்னீர் தெளித்திருக்கிறார்கள்!

## அனுராவும் நாளேடுகளும்

அனுரா பண்டாரநாயகா யார்?

இந்த நாட்டின் அனுபவமிக்க மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரல்லர்! ஆட்சியைக் கொண்டு நடத்துகின்ற அரசாங்கத்தை இயக்குகின்றவர்களில் ஒருவருமல்லர்!

அரசியலில் அனுபவமற்ற இளம்பிஞ்சு அவர்! இரு பிரதமர்களின் மகன் என்றதைத் தவிர வேறு அரசியல் பின்னணி ஏதும் இல்லாதவர் அனுரா!

அப்படிப்பட்டவர் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கு சிந்திய முன்னுக்குப்பின் முரண்பட்ட அலட்டல்களையெல்லாம் ஏதோ பெரிய அரசியல் ஞானி ஒருவரின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிப்பது போல—இந்நாட்டுப் பத்திரிகைகள் அனைத்தும் ஒரு கிழமையாக நாள் தோறும் பக்கம் பக்கமாக வெளியிட்டன.

எந்தச் செய்திக்கு— யாருக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் — என்பது தெரியாமல் இந்த நாளேடுகள் இப்படி நடந்தன என்று நாம் கூற மாட்டோம்!

ஆனால் தமிழ் சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சிக்கு— இன எழுச்சிக்கு எதிராக யார் ஏதுச்சொன்னாலும்— அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு — தமிழ் மக்களை குழப்ப வேண்டும் என்பதுதானே இந்நாட்டு நாளேடுகளின் ஒரே இலட்சியம்! ஒரே கொள்கை!

எனவே தான், அனுராவின் அனுராகத்துக்கு இந்த நாளேடுகள் அதிக முக்கியத்துவம் கொடுத்ததில் நமக்கு வியப்பு ஏதும் ஏற்படவில்லை!

## மக்கள் ஆதரவு

அனுரா பண்டாரநாயகாவுக்கு அங்கு வரவேற்பு — இங்கு வரவேற்பு என்று குறிப்பிட்டு, அவற்றில் அவர் பேசியதாக பக்கம் பக்கமாக நாளேடுகள் செய்திகள் வெளியிட்டிருந்தனவே தவிர —ஒரு ஏடாவது அனுரா பேசிய கூட்டங்களில் திரண்ட மக்கள் கூட்டத்தைப்படம் பிடித்துப் போட்டிருந்ததை நாம் காணவில்லை!

இத்தனை முக்கியத்துவம் அனுராவின் பேச்சுக்களுக்கு கொடுத்திருப்பவர்கள் — நிச்சயம் படத்தையும் பிரசுரித்திருக்க தவற மாட்டார்கள்!

ஆனால்—குறிப்பிட்ட ஏழு எட்டு பேர்தானே அனுரா பேசியதாக பத்திரிகைகளில் வந்த அத்தனை 'மாபெரும்' கூட்டங்களிலும் காணப்பட்டார்கள்.

அருளம்பலம், தியாகராசா, ஆள்பிரட் துரையப்பா, விநோதன், இராசசிங்கம்...... இப்படி குறிப்பிட்ட சிலர்தானே அனுரா பேசியதாக சொல்லப்பட்ட ''மாபெரும்'' கூட்டங்களில் எல்லாம் ''திரண்டு'' நின்றார்கள்?

எனவே குறிப்பிட்ட ஏழு, எட்டுப்பேரை 'மக்கள் வெள்ளமாக' எப்படிக் காட்டுவது? எனவே பத்திரிகைகள் புத்திசாலித்தனமாக கூட்டத்தில் கூடிய மக்கள் படத்தைப் போடாமல் இருட்டடிப்பு செய்து விட்டன.

## சர்வாதிகாரம்

9-2-74ல் நடைபெற்ற தமிழ் தேசிய இனத்தின் துக்க நாள் கூட்டத்துக்கு— கொழும்பில், யாழ்ப்பாணத்தில் — திருகோணமலையில் — எந்த இடத்திலேனும்—மண்டபத்தினுள்ளே கூட — ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி தரமுடியாது என மறுத்துவிட்ட பொலிசார், அனுராவின் கூட்டங்களுக்கு மட்டும் — தமிழரசுக்கட்சியையும் தமிழர் கூட்டணியையும் திட்டுவதற்கு மட்டும்— ஒலிபெருக்கி பாவிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள்!

தமிழ் தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு நடந்த இரங்கல் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி அனுமதி மறுப்பு —தமிழர் தலைவர்களை திட்டும் கூட்டங்களுக்கு மட்டும் ஒலிபெருக்கிக்கு அனுமதி!! சிங்கள சர்வாதிகாரம் எவ்வளவுதூரம் தமிழினத்தை நசுக்கி வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்!

ஒலி பெருக்கியிருந்தும், நண்பர்களுடன் பேசுவதற்கு எனக்கு ஏன் ஒலிபெருக்கி என்று கேட்டுவிட்டு ஒலிபெருக்கியின்றியே அனுரா பேசியதாக ஒரு செய்தி கூறுகிறது!

உண்மைதான்! நான்கு, ஐந்துபேருக்கு பேசுவதற்கு எதற்காக ஒலிபெருக்கி? இதிலிருந்தே அனுராவுக்கு திரண்ட மக்களின் தொகை நமக்குப் புரிகிறது!

---

'எஸ்'ஸாரெம்'

---

## பண்டா செல்வா ஒப்பந்தம்

செல்வா—பண்டா ஒப்பந்தம் அமுல் நடத்தப்பட்டிருந்தால், தமிழர்களின் பிரச்சினை தீர்ந்திருக்கும் என்ற சென்ற விடமெல் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார் அனுரா பண்டாரநாயகா.

அதே வாயினல் — தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதைத் தமிழரசுக் கட்சி விரும்பவில்லையென்றும் கூறியிருக்கிறார்!

தமிழர் பிரச்சினையை தமிழரசுக்கட்சி தீர்க்கவிரும்பியிராவிடின் பண்டா—செல்வா ஒப்பந்தம் என்று ஒன்று உருவாகியே இருக்க முடியாதென்ற உண்மையை சிந்திக்குமளவுக்குக் கூட அவருக்கு அரசியல் பொது அறிவு பூச்சியமாக இருப்பதைக் காணும்போது நமக்கு மனவருத்தமாகத்தான் இருக்கிறது.

பண்டா—செல்வா ஒப்பந்தத்தை மீண்டும் நடைமுறைப் படுத்தும்படி அரசியல் நிர்ணய சபையில் கோரிக்கை விடப்பட்டபோது அனுரா என்ன செய்து கொண்டிருந்தார்? அம்மாவிடம் சொல்லி அமுல்படுத்தியிருக்கலாமே! அரசியல் சட்டத்தில் தமிழுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கச் செய்திருக்கலாமே!

ஏன் இப்போது கூட அரசுக்கு மனமிருந்தால் — பண்டா — செல்வா ஒப்பந்தத்தை அமுல் படுத்த சட்டமியற்றலாமே! இதற்காக தனது தாயாருடன் சண்டை போடுவதைவிடுத்து யாழ்ப்பாணத்தில் போய்நின்று யாருக்காக முதலைக்கண்ணீர் வடிக்கிறார் அனுரா!

## தமிழரசை ஒழிப்பாராம்

தமிழரசுக் கட்சியை ஒழிக்கப்போகிறாராம்! கொக்கரித்திருக்கிறார்— தமிழ் தரகர்களின் 'இளவரசர்'! தகப்பன் பண்டார நாயகா முயன்று தோற்றதை — தாய் சிறிமா அம்மையாரால் முடியாமல் போனதை— இரட்டை டாக்டர் என். எம். பெரேரா, பீட்டர் கெனமன், விக்கிரமசிங்கா, டட்லி சேனநாயகா......இப்படி பழம் தின்று கொட்டை போட்டவர்கள் எல்லாம் முயன்றும்—சட்டங்களை ஏவி தடை போட்டும் — தலைவர்களையும் தொண்டர்களையும் சிறைக்குள் தள்ளியும்— அழிக்க முடியாத தமிழரசுக்கட்சியை — அரசியலில் நேற்று முளைத்த காளான் அனுரா ஒழிக்கப்போகிறாராம்! இதைக்கேட்டு விழுந்து விழுந்து சிரிப்பதைத்தவிர வேறு நாம் என்ன செய்ய முடியும்!

தமிழரசுக்கட்சி — தமிழினத்தின் ஜீவசக்தி. அதை ஒழிப்பதற்கு உலகிலே எந்த சக்தியாலும் முடியாது.

இன்று ஒரு பொதுத்தேர்தல் நடக்குமானால் — சிங்கள மக்களால் அரசியலிலிருந்து தமது கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி முற்றாக வேரோடு கெல்லியெறியப்படும் என்ற பகிரங்க உண்மையைப் புரிந்துகொள்ள முடியாமல் யாழ்ப்பாணத்திற்கு சென்று தமிழரசுக் கட்சியை அழிக்கப்போவதாக வீராப்புப்பேசும் இந்த சூராதி சூரரைப்பார்க்கும்போது நமக்கு சிரிப்பு வருகிறதே தவிர ஆத்திரம் வரவில்லை!

## அழித்துப்பாருங்கள்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டால் தமிழரசுக்கட்சி அழிந்துவிடும் என்கிறார் அனுரா. சரி — தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் அவரும் அவரது தாயாரும் தமிழரசுக் கட்சியை அழித்துவிடலாமே! ஏன் இன்னும் அதைச் செய்யாமல் இருக்கிறார்கள்? தமிழர் உரிமையை ஏன் இன்னும் வழங்காமல் இருக்கிறார்கள்?

சிறீலங்கா சுதந்திரக்கட்சியினால் மட்டுமே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமாம்! சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வேரோடு தீர்த்து வைக்கவே முயலுகிறது என்பதில் நமக்கு ஐயமில்லை. ஆனால் எப்படி அதைச் சாதிக்க முயன்று கொண்டிருக்கிறது என்பதுதான் கேள்வி!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைப்படி தமிழ்ப் பிரச்சினை தீரும் காலம் வரும்போது—இந்நாட்டில், தமிழினம் என்றோர் இனம் தனித்துவத்துடன் வாழ மாட்டாது; தேசியம் என்ற போர்வையின்கீழ் சிங்கள பௌத்தத்துடன் தமிழ் மக்களையும், தமிழினத்தையும் இரண்டறக்கலக்கச்செய்து— இலங்கையை தனி பௌத்த சிங்கள நாடாக்குவதன் மூலம் — தமிழர் பிரச்சினையை தீர்ப்பதுதான், சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு போட்டுள்ள சதித்திட்டமாகும். இதை எதிர்த்துத்தான் தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் போராடிவருகிறது தமிழ் சமுதாயத்தின், இன, மத, மொழி, பிரதேச தனித்துவங்களைப் பாதுகாக்க போராடிவருகிறது!

## சதித்திட்டம்

தமிழினத்தை விழுங்கி ஏப்பமிடுவதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் தங்கள் சதித்திட்டத்தை எதிர்த்து நின்று—தமிழ் சமுதாயத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குப்போராடி வருவதால்தான் தமிழரசுக்கட்சியையும், தமிழர் கூட்டணியையும், அனுரா பண்டாரநாயகாவும், அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் இவ்வளவு கடுமையாக, இவ்வளவு துடுக்குத்தனமாக எதிர்க்க முற்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை தமிழ் மக்களுக்கு தெரியும்!

## கருணாநிதியை நாம அறிவோம்!

தமிழரசுக்கட்சிக்கும் இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அரசியல் ரீதியான உறவு ஏதும் இல்லையென்ற இந்தியப் பிரதமர் தங்களுக்கு கூறியிருப்பதாகவும் அனுரா சொல்லியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சிக்கும், தி. மு. க.வுக்கும் அரசியல் தொடர்பு இருப்பதாக இது நாள்வரை சிங்கள மக்களிடையே பூச்சாண்டி காட்டி வந்திருப்பவர்கள் அனுரா சார்ந்திருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தானே!

எனவே இது விஷயத்தில் அனுராவுக்கும் அவரது அம்மாவுக்கும் இந்திராகாந்தி கொளுத்தியுள்ள நல்லறிவுச் சுடர் என்றென்றும் அணையாது இருக்குமென்று நம்புகிறோம். மீண்டும் சுதந்திரக்கட்சியினர், பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதுபோல, சிங்கள மக்களிடையே தி. மு. க பூச்சாண்டி காட்டமாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அதே நேரத்தில், தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள் தமக்கு கூறியதாக வேறும் சில வதந்திகளை அனுரா வடக்கே இட்டமிட்டு விதைத்திருக்கிறார். இது சம்பந்தமாக நாம் அனுராவுக்கு கூறக்கூடியது இதுதான்:—உங்களை விட உரமிர மடங்கு, கருணாநிதியையும், அவரது உள்ளத்து உணர்ச்சிகளையும் நாம் அறிவோம்; ஈழத் தமிழ் மக்கள் அறிவார்கள்; என்பதை மட்டுமே இப்போது கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

## இனக்கலவரம்

இறுதியாகவொன்று—1958ம் ஆண்டு இனக்கலவரத்தைச் சுட்டிக் காட்டியும் அனுரா பண்டார நாயகா ஏதோ பயமுறுத்துவது போலபேசியிருக்கிறார். அவருக்கு நாம் தமிழ் மக்கள் சார்பில் இதையே கூறவிரும்புகிறோம். 1958 ஆண்டு இனக்கலவரம்போல மீண்டும் ஒரு கலவரம் ஏற்படுவதை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் அப்படியொரு கலவரம் ஏற்பட்டு விடுமே என்பதற்கு அஞ்சி அதைத் தவிர்ப்பதற்காக— தம்முடைய, மொழி, இன உரிமைகளும் சுதந்திரமும் அழிந்துபோவதை பார்த்துக் கொண்டு ஈழத்தமிழர்கள் கோழைத்தனமாக அடங்கிக்கிடக்கமாட்டார்கள்.

---

## சனவரி 10ல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் காலமானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக தாய்ச்சங்கக் காரியதரிசி திரு எல்.எச் பெர்னன்டோ பங்கு பற்றினர்.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**618-வது நாள்**

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வசப்படுத்துவ தாயமைந்தது.

மாநாட்டின் இறுதிநாட்களில், வெளிநாட்டறிஞர்கள் மட்டுமல்ல—நாம்கூட—இந்த வீதியெது, அடுத்த வீதியெது என்று பிரித்து அறியமுடியாதபடி யாழ்நகரின் எல்லா வீதிகளும் ஒன்றையொன்று விஞ்சும் விதத்தில் எழில் கொஞ்சிடக் காட்சியளித்தன.

குலைதள்ளிய வாழைகளை நாட்டினர்; ஈழநீர் என்று மதுரைப் பேராசிரியர் முத்து சண்முகம் அவர்களால் புகழப்பட்ட செவ்விளநீர்க்குலைகளைக் கொண்ட தென்னைகளை அப்படியே பெயர்த்துவந்து வீதிகள் தோறும் நாட்டினர்; நுங்குக் குலைகளுடன், கனைமுட்டிகளும் கூடிய முழுபனைமரங்களை பெயர்த்து வந்து நாட்டினர்; வீதிகளை முடி முத்துமணிஆரங்களால்பந்த லிட்டனர்; முக்கிய சந்திகளில் எல்லாம் அலங்கார வரவேற்பு வளைவுகளையும், முத்துச்சிகரங்களையும் வைத்திருந்தனர்; பனைகளையும், தென்னைகளையும், வாழைகளையும் மூங்கில்களையும், முத்துச்சிகரங்களையும், அலங்கார வளைவுகளையும், பல்வேறு வண்ணங்காட்டி ஒளி புமிழும், மின் விளக்குகளால் அலங்கரித்து வைத்தனர்! அலங்காரச் சிகரங்களில் பொருத்தப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளில், தமிழின் பெருமையை — தமிழ்ப்பண்பாட்டின் அருமையை—எடுத்துக்கூறுகின்ற தமிழிசைப் பாடல்கள் இசைக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

தமிழ் வாழ்க! தமிழ் வெல்க! 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்பன போன்ற இன எழுச்சி முழக்கங்கள் ஆங்காங்கே எழுதிவைக்கப்பட்டிருந்தன. சில இடங்களில், பச்சைத் தென்னோலையினால் இடுகு பின்னி, அதிலே குருத்தோலையினால் "தமிழ் வாழ்க" என்று இழைத்து—ஆங்காங்கே வைத்திருந்த காட்சி, கலைநுட்பத்துடன் மொழி உணர்வையும் காட்டுவதாயமைந்திருந்தது.

இதே வேளையில் மற்றொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். தீவிர சுதந்திர உணர்ச்சிகொண்ட யாரோ தமிழ் வாலிபர்கள் சிலர்—இங்குவரும் வெளிநாட்டறிஞர்களுக்கு ஈழத்தமிழர்களின் விடுதலைக் கோரிக்கையை உணர்த்துவதற்காக அவர்களது கண்களில் படக்கூடிய இடங்களாகப் பார்த்து—சுவர்களில் — "தமிழர்கள் வேண்டுவது சுதந்திரத் தமிழ்நாடு: அடிமை நிலையை ஒருபோதும் ஏற்கோம்; துப்பாக்கிமுனையில் என்றாலும் சுதந்திரம் பெறுவோம்" என்று எழுதி வைத்திருந்தார்கள்!

'கடல் நீர் ஏன் கரிக்கிறது தெரியுமா? — ஈழத்தமிழர்கள் சிந்துகின்ற கண்ணீரே அதற்குக் காரணம்'— என்று கூறிய பெருந்தகை-உலகெங்கும் வாழுகின்ற தமிழர்களின் இதய சிம்மாசனங்களிலே கொலுவீற்றிருக்கின்ற பேரறிஞர்—இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழன் தவமிருந்து பெற்ற செல்வம்—அண்ணாவினுடைய எழிலோவியம் பல இடங்களில் காட்சி தந்து தமிழர்களுடைய நாடி நரம்புகளில் புது முறுக்கேற்றிக்கொண்டிருந்தது!

'பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?' என்று ஈழத் தமிழனைப் பார்த்து கேட்பது போல—ஒளியுமிழும் கண்களுடன் பல இடங்களில் பாரதி காட்சி தந்தார்.

இதே போல — தமிழுக்கு வாழ்வு தந்த ஈழத்தின் பெரும்புலவர்கள், ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, அறிஞர் சித்திலெப்பை, மீன்பாடும் தேனாட்டு வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார், மகா வித்துவான் கணேசையர், சுவாமி ஞானப்பிரகாசர், போன்றோரின் எழிலோவியங்கள் யாழ்நகரின் வீதிகளை அலங்கரித்தபடி காட்சியளித்தன!

வீட்டுக்கு வீடு, வாசல் தோறும் மாக்கோலமிட்டு, நிறைகுடம் வைத்து— தமிழ் அறிஞர்களை மனம் நிறைந்திட வருக வருக என்று நம் தமிழ்க் குலப் பெண்டிர் வரவேற்று நின்ற பண்பாடு, சங்க காலத்தமிழகம் மீண்டும் உருவாகி விட்டதோ எனும் பிரமையை நமக்கு ஏற்படுத்தியது!

இரவிலோ, எழில்குலுங்கிடும் பூம்பொழிலாக காட்சியளித்த அட்ட வீதிகள்தோறும் நாள்தோறும் மேடையமைந்தது; அந்த மேடைதோறும், இசையும், பாட்டும், பண்ணும் பரதமும், நாதசுர மங்கல நாதமுமாக போதும் போதுமென்றளவுக்கு செவிக்குணவு சிந்தை நிறையக் கிடைத்தது!

தமிழன்னைக்கு நடைபெறும் மாநாடு கண்டிடவும் மாநாட்டையொட்டி நடைபெற்ற கண்காட்சி பார்த்திடவும், எழில் குலுங்கும் யாழ்நகரின் புதுப்பொலிவு கண்டிடவும், இயல் தமிழ்ச் சுவையும் இசையும் பாட்டும் கேட்டு இரசித்திடவும், நாள்தோறும் விழா நடைபெற்ற அத்தனை நாட்களிலும்—கிராமங்களில் இருந்தெல்லாம் கட்டுச்சோறுகட்டிகொண்டு படையெடுத்து வந்திருந்த தமிழர் கூட்டம், அகமும் முகமும் மலர்ந்திட, வீதிகள் தோறும் போவதும் வருவதும் — கலகலவெனச் சிரித்திடுவதும், 'தமிழ் வாழ்க' வென முழக்கமிடுவதுமாக இருந்த காட்சி—அப்பப்பா! எப்போதுமே நம் இதயத்தை விட்டு நீங்க முடியாத காட்சியாகும்!

விழாக்கோலம் பூண்டிருந்த யாழ்நகரின் பல்வேறு இடங்களில் மாநாட்டையொட்டிய வர்ணனை ஒன்று தமிழக முதல்வர் அவர்களின் அந்த கரகரத்த தமிழ்க்குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது 'டேப்' மூலம் அது ஒலி பரப்பப்பட்ட இடங்களில் எல்லாம் சுற்றிவர மக்கள் கூட்டம் ஆர்வத்துடன் நின்று அப்பேச்சை சுவைத்துக் கேட்டுக்கொண்டிருந்ததைக் கண்டேன். அச்சொட்டாக அது கலைஞர் கருணாநிதியின் குரல் போலவேதான் இருந்தது; அதில் சந்தேகமேயில்லை!

எப்படிக் கருணாநிதியின் அந்த 'டேப்' இங்கு வந்தது? கருணாநிதி வரவில்லை; அங்கிருந்து செய்தியனுப்பியிருக்கிறார் என்று மக்கள் தமக்குள் பேசித்திருப்திப்பட்டுக் கொண்டனர்.

ஆனாலும் அது கலைஞரின் குரல் அல்ல; என்பதை நான் அறிவேன். நம் மத்தியில் வாழும் உணர்ச்சியுள்ள ஒரு தமிழன்பர் கலைஞரைப் போலவே குரல் கொடுத்திருக்கிறார் என்பதையும் அவரது பெயர் பீதாம்பரம் என்பதையும் நான் பின்னர் விசாரித்தறிந்து கொண்டேன்!

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். தமிழக முதல்வர் கலைஞரோ, அன்றி தமிழக அமைச்சரவையின் சார்பில் நாவலர் நெடுஞ்செழியனோ தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு நிச்சயம் வருவார்கள் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்த்து ஆர்வமுடன் காத்திருந்தார்கள். அவர்களில் யாருமே வராதது தமிழ் மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றம்தான்!

தமிழக முதல்வர் தமக்கோ, தமிழக அரசுக்கோ—அழைப்பு ஏதும் மாநாட்டு அமைப்பாளர்களால் விடுக்கப்படவில்லையென்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். மாநாட்டு அமைப்பாளர்களோ, அழைப்பு அனுப்பப்பட்டதாக திட்டவட்டமாகக்கூறுவதுடன், மாநாட்டு அழைப்புக் கிடைத்து தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியையும் தங்களுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

எனவே மாநாட்டு அமைப்பாளர்களால் தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ்கள் இடையில் உள்ள பெருச்சாளிகளால் விழுங்கப்பட்டும் இருக்கலாம்; அதனால் அவருக்கு அழைப்புபோய்ச்சேராமலும் இருந்திருக்கலாம்!

ஆனாலும், இது விஷயத்தில் மாநாட்டு அமைப்பாளர்கள் மீதே நான் குறை கூறவிரும்புகிறேன். தமிழக முதல்வர், நாலரைக் கோடி தமிழர்களின் தலைவர்; தமிழ் நாட்டின் தலைவர்; உலகில் உள்ள ஒரேயொரு தமிழ் முதலமைச்சர்; தமிழாராய்ச்சி மாநாட்டில் நிச்சயம் கலந்துகொள்ளவேண்டியவர்; அப்படிப்பட்டவருக்கு பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்பது போலன்றி—அழைப்பிதழ் அவரது கைகளுக்குசென்றடைய வேண்டுமென்பதில் சிறிது அக்கறை காட்டி அதற்கேற்ற நடவடிக்கை யெடுத்திருந்தால், அழைப்புக் கிடைக்கவில்லையென்று அவர் மனம்நொந்து கூறும் நிலை ஏற்படாதுதவிர்த்திருக்கலாம்.

எனினும் இங்கிருந்த நெருக்கடிகளும் இலங்கை அரசின் கெடுபிடிகளும், மாநாட்டு அமைப்பாளர்களுக்கு அந்த வகையில் சிந்தனை செய்ய இடமளிக்கவில்லைபோலும்!

மாநாட்டைக் கொழும்பில் நடத்திபிருந்தால் அரசு பத்து இலட்சம் ரூபாய் மாநாட்டுக்காக செலவழித்திருக்கும் என்று மாநாட்டுப் பக்கமே வரமாட்டேன் என்று அறிக்கை விட்ட ஒருவர், மாநாடு நடந்துகொண்டிருந்தபோது, திருக்கோணமலைக்குச்சென்று அங்கிருந்து அழுதுதீர்தார் ஆனால், தமிழ் மக்கள் தாமாகவே முன் வந்து மாநாட்டையொட்டிய அலங்காரங்களுக்காக மட்டும் பலஇலட்சம் ரூபாய்களை செலவழித்திருந்த பான்மை அதைப்பார்த்தவர்களுக்கன்றோ விளங்கும்! வெறும் அறிக்கை வீரர்களுக்கு — உணர்ச்சியற்ற ஜடங்களுக்கு அது எப்படி புரியும்?

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி விழாக்கோலம் பூண்டிருந்த யாழ் பாணத்து நகரத்தைப் பார்த்த போது இன்று தமிழ் சமுதாயத்துக்காக சிறைச்சாலையிலே 618வது நாளாக தவமிருந்துவரும் உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தனின் ஓர் பாடலே நினைவுக்கு வருகிறது!

'தமிழ் மண்ணின் மக்கள்
தெருப்புறங்கள்
ஆனந்த வசகள எங்கணும்
கொண்டாட்டம்!
ஒளிப்பந்தல் ......
அழகின் சிரிப்பம்மா...!'

'முத்து வளைவுகள் மணிகள்
பச்சை மாவிலைப்பந்தல்
முகம் குனியும் பத்தினிபோல்
குலை சாத்த வாழை!
தெருப்புறத்தே! கோலம்
தரையெல்லாம்!
குத்து விளக்குகள்! மலர்கள்
காற்றில எழுந்தாடும்
வண்ணக் கொடிக்கூட்டம்
பத்துத் திசைகளும்
அழகுக் காட்சி...!'

'தனியெழில் கொண்டது
தமிழகம் பந்தல்கள்
தாங்கின வீதிகளை
மனிதரின் திரள நிறைக்
கிறதால் ஊர்மிசை
வீதிகள் மறைந்தனவாம்!

கோயில்கள் எங்கணும்
மணியொலி கொஞ்சின!
தமிழ் மனம் குளிர்ந்தநடைபோயின ஊர்வலம்
விடெலாம பொன் விழா!
பூத்தன நிறைகுடங்கள்!'

தமிழ் இனம் தனது விடுதலை நாளைக்கொண்டாடும் சுபவேளை வரும்போது இருந்திடக் கூடியமகிழ்ச்சியை தம்முடைய 'தமிழன் கனவு' எனும் நூலிலே மேற்கண்டவாறு கூறுகிறார். கவிஞர் எனினும் அதே போன்ற மகிழ்ச்சியைதமிழன்னை யாழ் நகரில் கொலுவீற்றிருந்த நாட்களிலும் தமிழ் சமுதாயம் கண்டது!

ஃ ஃ ஃ

இத்தகைய எழில் கொஞ்சிய யாழ் நகரின் வீதி வழியேதான் தமிழன் வரலாற்றையும் பண்பாட்டையும் சித்திரிக்கும் அந்த அலங்கார ஊர்திகள் பவனி சென்றது. ஊர்வலம் ஆரம்பமாகும் போது ஏற்பட்ட தடைகள் தாம் எத்தனை எத்தனை?

# இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்நாட்டுப்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இறங்குவது என்று இலங்கைத் தமிழ் மக்கள் முடிவு செய்துவிட்டனர்.

இன்று இலங்கைத் தீவு எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினை இதுதான்.

ஒரே மொழி பேசுகிற காரணத்தினாலும் தமிழ நாட்டிலிருந்து மிக அருகில் இருப்பதாலும ஒரு இனத்தைச் சேர்ந்தவர் என்பதாலும இலங்கையின் பூர்வகுடிகளான தமிழ் மக்களுக்கு இன்னல் நேரும் போதெல்லாம் தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள் வேதனையால் துடிப்பது இயற்கையாகும்.

இப்படிப்பட்ட அனுதாப உணர்வை அரசியல் காரணங்களைக் கூறித்தடுத்துவிட முடியாது.

கானடாவிலும் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ஆஸ்திரேலியாவிலும் வாழ்கின்ற மக்கள் தனித்தனி நாடுகளைச் சேர்ந்தவர்களானாலும்—ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதால் உணர்ச்சி பூர்வமாக ஒன்றுபடுகிறார்கள் அல்லவா?

கிழக்குப் பாகிஸ்தான் மக்களை யாகியாகான் கொடுமைப் படுத்தினன். அதைக்கண்டு அகில உலகமும் இந்திய மக்களும் துடித்தார்கள். என்றாலும் இந்தியாவிலுள்ள வங்க மொழி பேசுகிற மக்களுடைய வேதனை தனியான பொருள் படைத்ததாக இருந்தது.

அதற்குக்காரணம் அன்றைய கிழக்குப் பாகிஸ்தான் மக்களும் இந்தியாவில்உள்ள வங்காள மக்களும் அரசியல் எல்லைகளால் பிரிக்கப்பட்டிருந்தாலும் மொழியால் ஒன்றுபட்டிருந்தார்கள் என்பதுதான்.

எனவே ஒருமொழி பேசுகிற மக்கள் பல்வேறு நாடுகளில் குழப்படும்போது — அரசியல் எல்லைகளால் ஏற்படும் இடைவெளிகளை உடைத்தெறிந்து தங்கள் அனுதாபஉணர்வுகளை வெளியிடுவதைத் தடுக்கமுடியாது.

அவ்வகையில் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தங்கள உரிமைகளுக்காக போராடி வரும் நேரத்தில்- அந்தப் போராட்டத்தினால் இன்னல்கள் அடையும் — போது—இந்தியாவில் உள்ள தமிழ் மக்கள வாயைமூடிக் கொண்டிருக்க வேண்டும் என்றுஎதிர்பார்ப்பதுநியாயமல்ல.

இதே நிலவரம் பங்களாதேஷ் போரின் போது ஏற்பட்டது. கிழக்கு வங்க மக்கள் கோரிக்கை எழுப்பிய போது அந்த மக்களின் கோரிக்கை நியாயம் என்று நாம் மனதார நம்பினோம். அதனை வெளிப்படையாக சொல்வதற்கு முன்னால் பாக்கிஸ்தானுடைய உள்நாட்டு விவகாரங்களில் நாம் தலையிடுவதா என்று தயங்கினோம்.

நிலைமை அபாயகட்டத்தை அடைந்த உடன் அதிகார சார்பில்லாத முறையில் ஜெயப்பிரகாஷ் போன்றவர்கள் உலகநாடுகளுக்கெல்லாம் சென்று கிழக்கு வங்க மக்களின் கோரிக்கையை எடுத்துச் சொன்னார்கள்.

அதுமட்டுமின்றி கிழக்கு வங்கமக்களின் கோரிக்கையில் உள்ள நியாயங்களை எடுத்துக் கூற பிரதமர் இந்திராவே பல நாடுகளுக்குச் சென்றார்.

பாக்கிஸ்தானுடைய உள்நாட்டுப்பிரச்சினையில் தலையிடக்கூடாது என்று அப்போது வாய்மூடிக் கிடக்கவில்லை.

அப்படி நியாயத்துக்காக கொடி உயர்த்திய காரணத்தினால் இந்தியாவின் செல்வாக்கும், இந்திராவின்செல்வாக்கும் உலக அளவில் உயர்ந்து நின்றது.

பங்களாதேஷ் விடுதலை அடைவதற்கு முன் என்ன நிலைமை இருந்ததோ ஏறத்தாழ அதே நிலைமைதான் இப்போது இலங்கையில் இருக்கிறது என்று தமிழர்கள் கருதுகிறார்கள்.

யாகியாகான் கையாண்ட இனஒழிப்பு கொள்கையைத்தான் இலங்கையில் உள்ள சிங்கள ஆட்சி கையாள்வதாக இலங்கைத் தமிழர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே பாகிஸ்தான் ஆட்சிக்கு நேர்ந்த சோதனை இலங்கையில் பண்டா ஆட்சிக்கு ஏற்படக்கூடாதுஎன்று எடுத்துச்சொல்லியாக வேண்டும்.

தமிழ் மக்கள் சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்தும் வரையில் அது இலங்கையின் உள்நாட்டுக்கோர்க்கையாக தோன்றும்.

, வருவது வரட்டும் என்று ஈழத்தமிழர்கள் துணிந்து ஒரு சுதந்திரக் கோரிக்கைக்காக போராடத்தொடங்கினால் அது ஒரு உலகப் பிரச்சினை ஆகிவிடாதா? இப்படி ஒரு கொந்தளிப்பு நிலைமை இலங்கையில் உருவாகாமல தடுக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு.

வளரும்

# கொழும்பில் வள்ளுவ விழா

அறிவகத்தினர், கொழும்பில் வள்ளுவ விழா எடுக்கிறார்கள் 3.3.74ல்பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

இதை யொட்டி 'வள்ளுவம்' சம்பந்தமான கட்டுரைப் போட்டியொன்றையும் அறிவகத்தினர் நடத்துகிறார்கள்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


52-வது வெற்றி தினம்

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ் நகர்)

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லத்தில் நல்வாழ்வும் இன்பமும் நிறைவதே சொர்க்கம்!

சிவாஜி, கே. ஆர். விஜயா, பாலாஜி, மனோகர், நாகேஷ், சச்சு, எம். ஆர். ஆர். வாசு நடித்த




விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி பிளாசா லிடோ (யாழ்நகர்) திரைகளில்

முத்துராமன் - ஜெயலலிதா நடித்த— சூரியகாந்தி

செல்லமகால்

7 வது வாரம்

எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, அசோகன், சோ, மனோரமா நடித்த—

எங்கள் தங்கம்

இரண்டாவது வாரம்




கிரவுன் (மருதானை)

டிலிப் குமார், ஷர்மிலா தாகூர், பிரேம்சொப்ரா, பிந்து, I. S. ஜோகர், நடித்த—

டஸ்ரான்

இசை:- லக்ஷ்மிகாண்ட் பியார்லால்

குடும்பத்தவர் பார்க்கவேண்டிய படம்

சென்ட்ரல் (மருதானை) 2, 6, 9.00
ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.00

ராணி (யாழ்ப்பாணம்) 10.30, 2.30, 6.30, 9.30

- இவ்வாண்டின் தலைசிறந்த நகைச்சுவை படம்
- காதல், பணம், திருமணம் சம்பந்தப்பட்ட ஓர் நகைச்சுவைக் கதை!

நாகேஷ், விஜயாலலிதா, எம். ஆர் .ஆர். வாசு

— நடித்த —



தேன் கிண்ணம்


1974ம் வருடம் பெப்ரவரி மாதம் 24-திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.